தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண்: 194.

# குச - லவன் கதை

பதிப்பாசிரியர் :

புலவர். **ச. திலகம்,**

தமிழ்த்துறை,

சரசுவதி மகால் நூல்நிலையம்,

தஞ்சாவூர்.



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூல் நிலையம்,**

**தஞ்சாவூர்.**

1983] [விலை ரூ. 5—50

முதற் பதிப்பு : 1983.

*

வெளியீடு :

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம்,
தஞ்சாவூர்.

*

பதிப்பகம் :

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலைய அச்சகம்,
தஞ்சாவூர்.

# முன்னுரை

தஞ்சை சரசுவதி மகால் நூலகம், கையெழுத்துப் பிரதிகளில் அடங்கியுள்ள பழங்கதைகளை அச்சேற்றும் அரும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. அதன் ஒரு படியாகவே குச, லவன் சரிதம் என்னும் இந்நூல் வெளிவந்துள்ளது.

பாரதத்தின் பழம்பெரும் இதிகாசங்கள் இராமாயணமும், பாரதமும் ஆகும். அவைகள் நம் பாரத மக்களின் அன்றைய நாள் பண்பாட்டையும், நாகரீகத்தையும் விளக்குவதோடு பக்தி சுவை மிகுந்த இலக்கியங்களாகவும் திகழ்கின்றன. அவற்றுள் ஆதிகாப்பியமாகிய இராமாயணத்தை அடியொற்றிப் பல இராமாயணங்கள் பல்வேறு மொழிகளில் இயற்றப்பெற்றுள்ளன. இராமாயணத்தின் ஏழாவது காண்டமாகிய உத்தர காண்டத்தின் பிற்பகுதியே இப்பதிப்பாகிய குச, லவன் சரிதம்.

"குச, லவன் கதை" என்பது இராமபிரானின் தவப்புதல்வர்களான குச, லவன் என்பவர்களின் சரிதத்தைக் கூறுகின்றது. எளிய இனிய நடையில் அமைந்துள்ள, இந்நூலில் இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் முடித்து இலங்கை அரசன் இராவணனைப் போரில் வென்று சீதையை மீட்டு வந்து அயோத்தியில் பட்டமேற்கையில் ஊரார் பழிச்சொல்லிற்கு அஞ்சி சீதையைக் காட்டிற்கு அனுப்ப, கர்ப்பிணியான சீதை குச, லவன் எனும் மைந்தர்களைப் பெற்றெடுத்து, அவர்களை சகல கலைகளிலும் வல்லுநர்களாக வளர்த்தல், அசுவமேதயாகம் மேற்கொண்ட இராமனின் குதிரையை குசன் கட்டிவைத்து அதனால் ஏற்பட்ட போர்களில் குசன் வெற்றிபெற, இராமனே குதிரையை மீட்கச் செல்லும்பொழுது, வால்மீகி

முனிவரால் அனைவரும் ஒன்றுசேர்தல், பின்னர் அயோத்தி யில் இராமன் பட்டமேற்று அரசாளுதல் என்ற விவரங்கள் தரப்பட்டுள்ளன,

கையெழுத்துப் படிகளில் உள்ள இதனை ஆய்ந்து வெளியிட பெருமுயற்சி எடுத்துக்கொண்டு பதிப்பித்த சரசுவதி மகால் நூலகத் தமிழாசிரியை திருமதி ச. திலகம் அவர்கட்கு பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலை விரைவில் அச்சிட்டு, வெளியிட உதவிய நூலக அச்சகப் பிரிவினருக்கும், இதுபோன்ற அரிய நூல் கள் வெளியிட அவ்வப்போது பொருளுதவி புரியும் மைய அரசுக்கும், மேலும் இந்நூலினை மேற்பார்வையிட்ட இந் நூலக நூலகரும், நிர்வாக அதிகாரி பொறுப்பும் கொண்ட திருவாளர் அ. பஞ்சநாதன், எம்.ஏ., பி.லிப்சி., அவர்கட்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

தஞ்சாவூர்,
*10—10—83.*

**இரா. சத்பதி,** இ ஆ. ப.,
மாவட்ட ஆட்சியர் & இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

# பொருளடக்கம்


| | | | பக்கங்கள் |
|---|---|---|---|
| முன்னுரை | ... | ... | *1—10* |
| குச, லவன் கதைச் சுருக்கம் | | ... | *1—16* |
| குச, லவன் கதை | ... | ... | *17—99* |
| குச, லவன் கதையின் பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை | ... | ... | *100—104* |

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாக வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

**ஆர். சத்பதி,** I. A. S.,
மாவட்ட ஆட்சியர் & இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

*தஞ்சாவூர்,*
*21—8—83.*

# முன்னுரை.

"நல்ல கணபதியை நாற்கால மேதொழுதால்
அல்லவினை யெல்லாம் அகலுமே—சொல்லரிய
தும்பிக்கை யானைத் தொழுதால் வினைதீரும்
நம்பிக்கை உண்டே நமக்கு"

கதைகள் முதன் முதலில் எப்பொழுது தோன்றின என்று கூறுவது கடினம். ஆதிமனிதன் காட்டில் வேட்டையாடச் சென்று திரும்பியவுடன் தன் அனுபவங்களை மற்றவர்களுக்குச் சொன்னதிலேயே கதையின் தொடக்கத்தைக் காணலாம் என ஆராய்ச்சியின் கூற்றுகக் காணப்படுகின்றது. 'கதைகள்', பண்டைய மக்கள் உலகத்தைப் பற்றியும், சமயத்தைப் பற்றியும் கற்பனையால் புனைந்துரைத்தவைகளாகும். ஆதிமனிதன், தன் மனத்தூண்டுதலின்பேரில் நடந்துகொண்ட விதத்திற்கும், செய்த செயல்களுக்கும், தக்க காரணங்கள் நாடி, அவைகளை விளக்குவதற்குச் சில செய்திகளைப் புனைந்தான். அதுவே பின்னர் கதையாக உருவெடுத்தது. இங்ஙனம் வளர்ச்சி பெற்ற கதைகள் பலவகைப்படும். அவை விலங்குக்கதை, தேவதைக் கதை, நாடோடிக்கதை, புராணக்கதை, காப்பியக்கதை, வரலாற்றுக்கதை, நீதிக்கதை முதலியன. பழங்கதைகளுக்கும், இக்காலத்தில் வளர்ந்துள்ள நாவல், சிறுகதை ஆகியவற்றிற்கும் வேறுபாடு உண்டு. உலகின் பல்வேறு நாடுகளிலும் சுவைமிகுந்த கதைகள் உண்டு. உதாரணமாக கிரேக்க ரோமானியப் புராணக்கதைகளும், காப்பியக்கதைகளும் உலகப்புகழ் பெற்றவை. டெனிசன் இயற்றிய அரசர் கதைகள்; ஜெர்மானியரான கிரிம் சகோதரர்கள் எழுதிய தேவதைக் கதைகள், அரபு மொழியில் முதலில் வெளியான அரபிக் கதைகள் முதலியன எல்லோரும் விரும்பிப் படிக்கவும் கேட்கவும் தக்க நல்ல கதைகளாகும்.

பிற நாட்டுக் கதைகள் போன்று வடமொழி இலக்கியத்திலும், தமிழ் இலக்கியத்திலும் பல கதைகள் உள்ளன. அவைகள் பெரும்பாலும் நீதிக்கதைகளாகவே அமைந்துள்ளன. விலங்குகளையோ, பறவைகளையோ வேறு பிராணிகளையோ கதாபாத்திரங்களாகக் கற்பனை செய்து, அவற்றின் வாயிலாக நீதியைப் போதிப்பது இராமாயணத்திலும், பாரதத்திலும் மற்ற புராணங்களிலும் காணப்படுகின்றது. பாரத காலத்திற்கு முன்னமே, வேதங்களிலும் இத்தகைய நீதிக் கதைகளைக் காண்கின்றோம். மீன்கள், மாடுகள், மரங்கள் முதலியனவும் பேசிக்கொண்டிருந்தன. என்ற கதைகளும், வேதத்தில் காணப்படுகின்றன. நீதிக் கதைகள், இராஜதந்திரத்தைப் போதிப்பவை, பிற நீதிகளைப் போதிப்பவை என இரண்டு வகைப்படும். பஞ்சதந்திரம், இதோபதேசம், பிருகத்கதை முதலியன இராஜ தந்திரத்தைப் போதிப்பனவாகவும், வேதாள பஞ்சவிம்சதி, கதாகுசுமமஞ்சரி முதலியன நீதியைப் போதிப்பனவாகவும் அமைந்துள்ளன. இனி தமிழ்மொழியில் காண்போம். தமிழ்நாட்டிலே வாய்மொழியாகக் கூறும் கதைகள் பல இருக்கின்றன. அவை பெரும்பாலும் அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை. மேலும் தமிழ்மொழியில் உள்ள கதைகள், 'அம்மானை' என்ற செய்யுள் வடிவத்தில் அமைந்துள்ளன. உதாரணமாக பவளக்கொடிமாலை, புலந்திரன் களவுமாலை, கள்ளழகர் அம்மானை, ஏணியேற்றம், ஆரவல்லி-சூரவல்லி கதை முதலியனவாகும். தேசிங்குராஜன் கதை, இராமப்பையன் அம்மானை முதலியவைகள் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட வீரச்சுவை மிகுந்த கதைகளாகும். விக்கிரமாதித்தன் கதை, அரபிக்கதை, ஈசாப்புக் கதை போன்றவை மொழிபெயர்ப்புக் கதைகள். வடமொழியிலுள்ள பஞ்சதந்திரம், இதோபதேசம் முதலியனவும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவையல்லாமல் உயர்ந்த நீதிகளைப் போதிக்கும் புராணக்கதைகளும், கடவுளுடைய திருவிளையாடல்களைக் குறித்த கதைகளும் செய்யுளிலும், உரைநடையிலும் இருக்கின்றன.

ஆதிகாலம் முதல், நாட்டில் வழங்கும் காவியங்களி லிருந்து சில ரசமான சம்பவங்களைப் பொருளாகக்கொண்டு கதைப்பாட்டுகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இலக்கியம் கற்றறியாத மக்களுக்கு இலக்கியத்தின் மேன்மையை எடுத் துரைக்கும் வகையில் இவை இயற்றப் பெற்றவையாகும். இவ்வகையைச் சார்ந்ததுதான் இந்நூலின் தலைப்பாகிய "குச, லவன் கதை". இதுபோன்று, தருமர்கதை, அன்ன தான மகாத்மியக்கதை போன்ற பல கதைகள் உள்ளன. குச, லவன் கதை பாரதநாட்டின் பழம்பெரும் இதிகாச மான இராமாயணக்காப்பியத்தின் தன்னிகரற்ற தலைவனான ஸ்ரீ இராமச்சந்திரமூர்த்தியின் தவப்புதல்வர்களான குசனை யும், லவனையும் பற்றியதாகும்.

இராமாயணத்தை முதன்முதல் வகுத்துக் காட்டியவர் ஆதிகவியாகிய வால்மீகி மகரிஷியாவர். இவர் எழுதிய இராமாயணம் பாலகண்டம் முதல் உத்தரகாண்டம் முடிய 7 காண்டங்களையும், 500 சருக்கங்களையும், 24,000 சுலோ கங்களையும் கொண்டது என பாலகாண்டத்திலும், உத்தர காண்டத்திலும் கூறப்பட்டுள்ளது. இதனை அடியொற்றிப் பிறந்ததுதான் கம்பராமாயணம். மேலும் அற்புத ராமா யணம், அத்யாத்ம ராமாயணம், ஆனந்த ராமாயணம், சங்கேத ராமாயணம் போன்ற இராமாயணங்களும் தோன் றின. வால்மீகி இராமயணத்தையே பின்பற்றி தெலுங்கில் பாஸ்கரன் என்ற கவியும், மலையாளத்தில் துஞ்சத்து எழுத் தச்சன் என்ற கவியும் இராமகாதையைப் பாடியுள்ளனர். இராமருடைய சரிதத்தைக் கூறுவனவற்றிற்கு எல்லாம் இராமாயணம் என்றுதான் பெயர் என்று கூறுவதற்கில்லை. ஏனெனில் காளிதாசர் இயற்றிய இராமயண நூலுக்கு 'இரகு வம்சம்' என்றும், போஜராஜன் இயற்றிய இராமகதைக்கு 'போஜசம்பு' என்றும், துளசிதாசர் இந்தி மொழியில் எழுதிய இராமகாவியத்திற்கு 'இராமசரிதமானஸம்' என்றும் வழங்குகின்றன. மேலும், வசிட்டர் எழுதிய இராமகாதை 'வாசிட்டம்' எனவும் வழங்குகிறது.

இராமாயணத்தின் ஏழாவது காண்டமாகிய உத்தர காண்டத்தின் பிற்பகுதியே குச, லவன் சரிதத்தைக் கூறுகின்றது. குச, லவன் இவர்களின் பிறப்பு, பட்டாபிஷேகம் ஆகியவற்றை மட்டும் இராமாயணத்தினின்றும் தனியாகப் பிரித்துச் சிலர் நாடகமாக உலகிற்குப் படைத்துள்ளனர். அவ்வாறு பிறந்ததுதான் தமிழில் உள்ள 'உத்தரராமாயண நாடக'மும், வடமொழியில் 'பவபூதி' என்ற மகாகவி எழுதிய 'உத்தரராமசரிதம்' என்ற நாடகமுமாகும். பவபூதி, இராமாயணத்தின் உத்தரகாண்டத்தின் பிற்பகுயில் காணப்படும் குசன், லவன் சரிதத்தையே நாடக வடிவம் கொடுத்து. இராமனையும், சீதையையும் சேர்த்து வைத்த பெருமையை அடைந்தார். சக்ரவர்த்தி திருமகனை இராமனை, மகரிஷி வால்மீகியின் கண்கள், மனிதனுக்கு வேண்டிய சீரிய பண்பாடுகள் ஒருங்கமைந்த உத்தம மனிதனாகக் கண்டன. அந்த இராமனையே கவிச்சக்கரவர்த்தி கம்பருடைய கண்கள், விண்ணோர் போற்றும் வேத விழுப்பொருளாகக் கண்டு வழிபட்டன. துளசிதாசருடைய கண்கள், தாரக மந்திரமான ஸ்ரீராமநாதத்தை ஏந்தி நிற்கும் உள்ளத்தில் உறைந்திருக்கும் உறுதிப் பொருளாகக் கண்டன. தெலுங்கில் ராமாயணம் பாடிய பாஸ்கரனும், மலையாளத்தில் ராமாயணம் பாடிய துஞ்சத்து எழுத்தச்சனும் ஆகிய இருவரும் இராமனைப் பலகோணங்களில் பார்த்துப் போற்றினார்கள். ஆனால் பவபூதி என்ற மகாகவியின் கற்பனைக் கண்களோ 'உத்தரராமசரிதம்' என்ற நாடகத்தின் மூலமாய், இராமனை மனிதருள் மாணிக்கமும், உலக மக்கள் உள்ளமாகிய அரியாசனத்தில் வீற்றிருக்கும் ஒரு ஜனநாயக நாட்டின் தலைவனுமாகக் கண்டன. இந்தப் பவபூதியின் நாடகத்தை அடியொற்றிப் பிறந்ததுதான் குச, லவன் கதையாகும் என்று எண்ண இடமுண்டாகின்றது. எங்ஙனமெனில் உத்தரராமசரிதத்தின் நாடக அமைப்பும் பெரும்பான்மை ஒத்தும், சிறுபான்மை வேறுபட்டும் இருக்கின்றன. இதன் விளக்கத்தை ஒப்புமை வேறுபாடுகளில் விபரமாகக் காணலாம். அவற்றைப் பின்னர் கூறியுள்ளேன்.

**சுவடி பற்றிய விளக்கம் :**

எமது நூலகத்தில் "குச, லவன் கதை" என்ற தலைப்பில் நான்கு சுவடிகள் உள்ளன. அவை முறையே 100, 101, 102, 103 ஆகிய பதிவெண்களைக் கொண்டவை. முழுமையாக இல்லை. பதிவெண் 102-ஐக் கொண்ட சுவடி மட்டும் முழுமையாயுள்ளதால் அச்சுவடியைப் பதிப்பிற்குகந்ததாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்நூலில் 295 செய்யுட்கள் உள்ளன. செய்யுட்கள் எளிய நடையில் இருப்பினும், எழுத்துப் பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. செய்யுட்கள் அறுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம், சந்த விருத்தம் முதலியவற்றால் ஆகியவை. சுவடியின் ஏடுகள் சிதைந்தும், செல்லரித்தும் காணப்படுகின்றன. இதன் மற்ற பிரதிகள் அபூர்த்தியாயிருப்பதால் முழு பாடபேதம் காண இயலவில்லை. இச்சுவடி எழுதப்பட்ட காலமோ, அல்லது ஆசிரியரின் காலமோ (Colophon) எவ்விடத்தும் குறிக்கப்படவில்லை. சென்னை G.O.M.L. கேட்டலாக்கில் (வால்யூம் II) "குசலவர் கதை" என்ற தலைப்பில் சுவடி (M. No. 525) காணப்படுகின்றது. இது கட்சி நகர்முராரி சீரங்கநாயர் குமாரரும், சோலைமலையழகரிடத்துப் பக்தியுள்ளவருமான ஒருவரால் செய்யப்பட்டது என்பது தெரிகிறது. இது 206 விருத்தங்களால் செய்யப்பட்டு பூர்த்தியுடையதாக காணப்படுகின்றது. எனவே அந்நூலின் ஆசிரியரும், இந்நூலின் ஆசிரியரும் ஒருவரல்ல என்பது தெரிகிறது.

**நூலாசிரியர் வரலாறு :**

இந்நூலாசிரியர்ஊர் அயனூர்(சீர்காழி)என்பதும், அவ்வூர் வேடப்பிள்ளை என்பாரின் மகனுன அழகப்பெருமானின் குமாரன் வினைதீர்த்தான் என்பதும் 100-வது எண்ணுள்ள சுவடியால் அறியக்கிடைக்கின்றன. இந்நூல் 4ம்செய்யுளில் தெளிவாக இல்லை. 57ஆம் செய்யுளில் இலக்குவன் கூற்றாக "சிவா சிவாயென்றனன்" என்று கூறியிருப்பதாலும், 80ஆம் செய்யுளில் "சங்கரன் கற்பனையோ"என சீதையின் கூற்றாகக்

கூறியிருப்பதாலும் இவர் சைவராக இருத்தல் கூடும் என ஊகிக்க முடிகிறது.

## நூல் நயம் :

இவர் தம் செய்யுட்களில் நயத்தை அழகாகக் கையாண்டுள்ளார். சீதை கானகத்தில் மயக்கமுற்று விழுந்த நிலையைக்கண்ட விலங்குகள் பறவைகள் முதலியன அவளை மயக்க நிலையிலிருந்து, மீட்பித்ததை 97, 98-ஆம் செய்யுட்களில் அழகுபடக் கூறுகிறார். ஆண்மான்களுடன் புலிகள், சிங்கம், கரடிகள், வராகமெல்லாம் அவளைச்சுற்றி தலை கவிழ்ந்து அமர்ந்துகொள்ள, அங்கிருந்த பட்சி இனங்களில் சிலவகைப் பட்சிகள் சூரியனுடைய ஒளிக்கதிர்கள் சீதையின்மேல் விழாதவாறு தன் விரிந்த சிறகுகளினால் பந்தலிட்டது போன்று மறைத்துக்கொண்டன. மேலும் சில பட்சி இனங்கள் அருகிலிருந்த நீர் நிலைகளிலிருந்து, தன் சிறகுகளை நனைத்து, அங்ஙனம் நனைந்த சிறகுகளை சீதையினுடைய மெய்யின் (உடம்பில்) மேல் விழும்படிச் செய்ய அதிலிருந்து விழுந்த நீர்த்துளிகளினால், சீதை மூர்ச்சை தெளிந்தாள் என்று கூறுகிறார். குசன், லவன் போரிட்ட செய்திகளை இக்கதையின் பிற்பகுதியில் விவரிக்கிறார். இப் புலவர் பழமொழிகளை அதிக இடங்களில் புகுத்தியுள்ளார் என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன.

இழிகு லந்தனில் தாரு வானவன்
இஞ்சொ லானது நஞ்சு காணுமோ
கழுதை யண்டையில் மேய்ந்த நற்பசு
கழுதை யாகுமோ பசுவ தன்றியே''.

செய்யுள்—44

"விறகது தன்னில் கோடி
விரைந்துதான் குவித்து வைத்து

பொறிதனைப் போட்ட பின்பு
புகையுடன் சூழ்ந்த தீப்போல்". 179

3 "கன்னியர் தான மாகக்
கருதியே ஈந்தி டாமல்
பொன்னையே வேண்டி வித்த
புல்லர்தங் குலட்ச யம்போல்" 219

"விதிமுத லெழுத்(தை யெல்லாம்)
வெல்லவும் வீர முண்டோ? 282

இந்நூலாசிரியர் "சந்தேகப்படுதல்" என்ற வார்த்தைக்கு "சந்தையம்" என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். இதனை 28, 78, 103, 127, 216 ஆகிய செய்யுட்கள் மூலம் அறியலாம். சிவபெருமான்மீது மிகவும் ஈடுபாடு உடையவர் என்பதற்கு சிவன் திரிபுரம் எரித்த செய்தியை 146-ஆம் செய்யுளிலும், 189-ஆம் செய்யுளிலும் சுட்டியுள்ளார். நீதியும், நேர்மையுமுடைய அரிச்சந்திரனையும், பகீரதனையும் 50-ஆம் செய்யுளில் சுட்டிக் காண்பித்துள்ளார். மேலும் வினையை அதாவது விதியை யாவராலும் வெல்லுதல் அரிது என்பதற்குச் சான்றாக அரிச்சந்திரன் மனைவியை விற்றதையும், மகனை இழந்து சுடுகாட்டில் காவல் காப்போனாக இருந்ததையும் சுட்டி விதியின் வலிமையை அரிச்சந்திரன் மூலமாகத் தெளிவுபடுத்துகிறார். இங்ஙனம், இதுபோன்று பல இடங்களில் நயம்பட விளக்கியுள்ளார்.

## ஒப்புமை வேறுபாடுகள் :

ஒரு நூலைப் பயிலுங்கால் அந்நூலின் கருத்து என்ன? அதற்கு ஒப்புமையான பிற நூல்கள் கூறும் கருத்து என்ன

வென்று ஒப்புநோக்குதல் இன்றியமையாததாகும். அப்படிப் பார்த்தால் பவபூதி உத்தரராமசரிதத்திற்கும், வால்மீகி ராமாயணத்தின் உத்தரகாண்டப் பகுதிக்கும் இந் நூலாசிரியரின் கூற்றுக்கும் பெரும்பாலும் கருத்துக்கள் ஒத்து இருந்தாலும், சிறுபான்மை இடங்களில் வேறுபட்டிருக்கின்றன. இதுபோன்று எத்தனையோ பதிப்பு ஆசிரியர்களின் கருத்தும் மாறுபட்டிருக்கும். இருப்பினும் எனக்குத்தெரிந்த சிலவற்றை இங்கு விளக்குகிறேன்.

வால்மீகியும், இராமாயணம் எழுதிய மற்ற புலவர்களும் தாம் எழுதிய உத்தரகாண்டத்தில், காப்பியத் தலைவனை இராமனையும், தலைவியான சீதையையும் பிரித்து விட்டனர். எங்ஙனமெனில் இறுதிவரை சீதை அயோத்தி வராமல், மைந்தர்களிருவரையும் இராமனிடத்தில் ஒப்படைத்து விட்டுத் தன் தாயாகிய பூமிதேவியினிடத்தில் சேர்ந்துவிட்டதாகக் கூறுகின்றனர். ஆனால் உத்தரராம சரிதம் எழுதிய பவபூதியும், இந்நூலாசிரியராகிய வினைதீர்த்தான் என்பவரும் இராமரையும், சீதையையும் மீண்டும் சேர்த்துவைத்து, இருவரும் சேர்ந்து ராஜ்யபரிபாலனம் செய்வதாக முடித்துள்ளனர். ஏனெனில், வடமொழி நாடகங்களை மங்கலமாக முடிக்க வேண்டுமென்பதே மரபாதலின் பவபூதி, அவ்வாறு செய்தார். எனவே' பவபூதி நாடகத்தை அடியொற்றி, "குச, லவன் கதை"யை இப்புலவரும், மங்கலமாக முடித்துவிட்டார். பவபூதி நாடகத்திற்கும் இந்நூலுக்கும் ஒரு சிறு வேற்றுமை என்னையெனில், சீதை புத்திரர் இருவரையும் பெற்று, வால்மீகியிடத்தில் கொடுத்துவிட்டு, கங்கையில் மறைந்தாள் என்றும், பிறகு கங்கையால் காப்பாற்றப்பட்டு கடைசியாகப் பெரியோர்களின் பேச்சுக்கிணங்கி, அங்கு வந்த சீதையை ஸ்ரீராமன் ஏற்றுக்கொண்டான் என்று கூறுகிறார். ஆனால் இந்நூலாசிரியர் அவ்வாறு ஒரு நிகழ்ச்சியையும் குறிப்பிடவில்லை. வால்மீகி இராமாயணத்தில், குச, லவன் இருவரும் அசுவமேத யாகத்தன்று நடத்திய இராமாயண

நிகழ்ச்சியில்தான், ஸ்ரீராமன் தன் புத்திரர்களை தெரிந்து கொள்கிறார் என்று கூறப்படுகிறது. ஆனால், பவபூதி நாடகத்திலும், இந்நூலாசிரியர் இயற்றிய இக்கதையிலும் கானகத்தில் வால்மீகி முனிவர் அறிமுகப்படுத்தி, புதல்வர்களை இராமரிடத்தில் ஒப்படைக்கிறார். இங்ஙனம் இது போன்று சில செய்திகள் பலர் இயற்றிய இராமாயணத்தில் பலவிதமாகக் கூறப்படுகின்றன. அவையெல்லாம் ஆராய்ச்சிக்குரிய செய்திகளாகும்.

**நன்றியுரை :**

இத்தகு சிறப்பு வாய்ந்த இந்நூலைப் பதிப்பிக்கும் பணியினை எமக்களித்த, எமது மகால் பதிவுக்குழு இயக்குநர் பொறுப்பும் உறுப்பினர் பொறுப்பும் வகித்த மாவட்ட ஆட்சியர் திரு. ச. மெய்கண்டதேவன் இ. ஆ. ப. அவர்கட்கும், இதனை வெளியிடும் பேறு பெற்ற தற்போதைய மாவட்ட ஆட்சியரும், எமது மகால் இயக்குநர் பொறுப்பும், உறுப்பினர் பொறுப்பும் கொண்டுள்ள திருவாளர் ஆர். சத்பதி, இ. ஆ. ப., அவர்கட்கும், இம்மகால் நூலகரும் நிருவாக அதிகாரிப் பொறுப்பும்கொண்ட திருமிகு. அ. பஞ்சநாதன், எம். ஏ., பி. லிப்சி., அவர்கட்கும் எனது நன்றி உரித்தாகிறது. இந்நூல், நன்முறையில் அமைய தன் கடின உழைப்பிற்கும் இடையில் எனக்கு ஆய்வுக் கருத்துரைகள் வழங்கி, பதிப்பித்தல் பணியில் ஊக்கமளித்த தமிழ்ப்பண்டிதர் புலவர் திரு. வீ. சொக்கலிங்கம் அவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இந்நூலை நன்முறையில் அச்சிட்டுத்தந்த எமது நூலக அச்சகத்தாருக்கும், பதிப்பித்தல் பணிக்குப் பொருளுதவி புரிந்த மைய அரசுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நூலில் சிறியேனின் சிற்றறிவினால் ஏற்பட்ட பிழைகளைப் பொறுத்தருள வேண்டுகிறேன். பிழைகள் திருத்தம்

பெற உதவினால் நன்றிக் கடப்பாடுடையேனாவேன். எனவே குற்றம் நீக்கிக் குணத்தினைக் கோடல் வேண்டுகிறேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவரத் துணைநின்ற எம் தமிழன்னையின் பொற்பாத கமலங்களை வணங்குகின்றேன்.

இங்ஙனம்,

**புலவர். ச. திலகம்,**
தமிழ்த்துறை,
சரசுவதி மகால் நூல் நிலையம்.

தஞ்சாவூர்,
*21—7—83.*

# குச, லவன் கதைச் சுருக்கம்

பூதலம் புகழ் அயோத்தியை ஆண்ட தசரதச் சக்கரவர்த்தி, புத்திரகாமேஷ்ட்டி யாகம் செய்து இராமர், இலக்குவர், பரதர், சத்ருக்கனர் என நன்மக்கள் நால்வரைப் பெற்றார். நால்வருக்கும் வெகு சிறப்பாக திருமணமும் நடந்தது. தாய், தந்தையர் கட்டளைப்படி இராமர் 14 ஆண்டுகள் வனவாசம் செல்ல நேர்ந்தன. வனவாசத்தின் பொழுது, வஞ்சனையால் இராவணன், சீதையை இலங்கைக்குக் கொண்டு சென்றான். அங்ஙனம் சென்ற தன் மனைவியை வானர சேனை உதவியுடன், இலங்கை அரக்கர்களுடனும், இராவணனுடனும் போரிட்டு வென்று, மீட்டு, அக்கினிப் பிரவேசத்தின் மூலம் மனைவியின் கற்பு நெறியை அறிந்து, மீண்டும் அயோத்தி வந்து, அரசாண்டார்.

மன்னன் மதியுடன் மிகவே அரசாட்சி செய்வதைப் பார்த்து, அன்னை கௌசல்யாதேவி, இராமனை உச்சி முகர்ந்து! நான் கண்ட கனவு இன்று நிறைவேறியது என ஆசீர்வதித்தாள்.

ஒவ்வொரு நாளும் இராமன் நன்முறையில் ராஜ்ய பரிபாலனம் செய்துகொண்டு அவர்களெல்லோருக்கும் பரமானந்தத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தார். நீதி மிகுந்த இரகு குலத்தில் உதித்த ஆதி அரசனின் மைந்தர்கள் அரசரானார்கள். அந்த இரகு குலத்தில் அவதரித்த நமக்கு இன்றளவும் புத்திரபாக்கியம் இல்லாமல் போனதே என மனம் மிகவும் வருந்திக் கொண்டிருந்தார்.

இராமர் ஒருநாள், பகலின் முதல் பாகத்தில் ராஜ்ய காரியங்களைக் கவனித்துவிட்டு, அந்தப்புரத்திற்குச் சென்றார்.

அப்பொழுது தன் பத்தினி சகல கல்யாண லட்சணங்களும் பொருந்தி வருவதைக் கண்டு பரமானந்தம் அடைந்து, அவளுடைய முகத்தைக் கவனித்துப் பார்த்து சீதே! உன் வம்சத்தை விருத்தி செய்யும் புத்திரன் உண்டாகப் போகிறுனென்று உன் அங்கலக்ஷணங்களால் எனக்குத் தெரிகிறது. உன் மனத்தில் தோன்றும் விருப்பத்தைச் சொல் தவருமல் நிறைவேற்றுகிறேன் என்ருர். அதைக் கேட்டு சீதை சற்று வெட்கமடைந்து நாதா நான் மறுபடியும் புண்யாசிரமங்களைப் பார்க்க வேண்டும். கங்கா தீரங்களில் முழுகிப் பழங்களையும், கிழங்குகளையும் புசித்து வாழும் ரிஷிகளின் திருவடிக்கீழ் ஒரு நாளாவது வசிக்கவும் விரும்புகிறேன் என்று பிரார்த்தித்தாள். மன்னரும் நாளைக்கே புறப்பட்டுப் போகலாம் என்று மறுமொழி பகர்ந்து, தனதிருப்பிடம் வந்தார்.

பிறகு சாமம், தானம், பேதம், தண்டமென்னும் சதுர்வித உபாயத்திலுஞ் சிறந்த மந்திரிகளுடனும், அதிகோபத்துடன் வரும் பகைவரைச் செயிக்கும் வல்லமையுடைய சேனுதிபதிகளுடனும் யுக்தி, புத்தி, நீதி இவைகளிற் சிறந்த பல பிரமுகர்களுடனும் சபா மண்டபத்தில் வீற்றிருந்தார். நகர மக்களைப் பார்த்து, தங்களுக்குள்ள குறைகள் யாவற்றையும் ஒளிக்காமல் சொல்லுங்கள், அவற்றில் நிந்திக்கும் காரியங்களை விலக்குகிறேன் என்ருர். அதைக் கேட்டு பத்ரன் என்பவன் சற்று நேரம் யோசித்து, சுவாமி, நான் தங்களிடம் எதையும் மறைத்துச்சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை, சொன்ஞல் வரும் தீங்கையும் நினைத்தால் அச்சமாக உள்ளது. இருப்பினும் தாங்கள் மன்னித்துக் கொள்ளவேண்டும் என்று கூறிவிட்டு பின்வரும் செய்தியைக் கூறலுற்ருன். கடைவீதிகளிலும், நாற்சந்திகளிலும், தோட்டங்களிலும், வனங்களிலும் மக்கள் இப்படிச் சொல்லுகிருர்கள். சமுத்திரத்தில் அணைகட்டியது இராவணனைக் கொன்றது எல்லாம் பொதுக்காரியங்கள்தான். ஆயினும் சீதையை வீட்டுக்கு அழைத்து வந்து அவளுடன் சேருவதிலுள்ள சுகம் இராமனுக்கெப்படியிருக்கிறதோ, சீதையை

இராவணன் பலாத்காரத்தால் மடியில் வைத்துக்கொண்டு இலங்கைக்குக் கொண்டு போய் அசோகவனத்தில் வைத்திருந்தான். ராட்சதன் வசத்திலிருந்தவளிடம் இராமனுக்கு அருவெருப்புண்டாகவில்லையே, நாமும் நம் பெண்களிடம் இம்மாதிரிச் செய்கைகளை இனி பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும், எனப் பலர் பலவிதமாய்ப் பேசிக்கொள்கிறார்கள் என்றான்.

பத்ரன் கூறிய வார்த்தை கூரிய பாணம்போன்று தன் மார்பிற் பாய்ந்தது. உளைந்த சிந்தையனாகி மனந்தளர்ந்து தனிமையான வேறிடத்திற்குச் சென்று, சமீபத்திலிருந்த துவார பாலகனைப் பார்த்து என் தம்பியர் மூவரையும் உடன் இங்கு வரச்சொல் என்று கூறினார். அவனும் அவ்வாறே செய்ய, தம்பியர் மூவரும் ராமனிருக்குமிடத்திற்கு ஓடி வந்தார்கள். களையற்ற தாமரை மலரைப்போலும், ராகுவால் பீடிக்கப்பட்ட சந்திரனைப்போலும் ராமனுடைய முகம் கண்ணீரால் நனைந்து வாடி இருப்பதைக் கண்டு, கவலையடைந்து பிரபஞ்சம் முழுவதும் கலங்கினாலும் கலங்காத ராமனுடைய மனத்தைக் கலக்கின துக்கம் என்ன என்று நினைத்து, என்ன சொல்லப்போகிறாரோ என எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இராமர் தம்பிமார் மூவரையும் பார்த்து, கண்களில் நீர்சொரிய தம்பிமார்களே! நீங்கள் என்னுயிர், நீங்கள் என் சக்தி, நீங்கள் என் புகழ், ஆகையினாலே என்னுடைய புகழும், இழிவும் உங்களுடையதாகும். நமது நகரத்திலும், தேசத்திலுமுள்ள சில மூட ஜனங்கள் அறியாமையால் சீதையின் நடத்தையைப்பற்றி தூஷிக்கிறார்கள். தண்டகாரண்யத்தில் ஒருவரும் இல்லாத சமயம் ராவணன் அவளைப் பலாத்காரமாய் எடுத்துக்கொண்டு போனதினால், எனக்கு நேர்ந்த அபவாதத்தைத் தீர்ப்பதற்காக அவள் அக்கினிப் பிரவேசம் செய்து களங்கமற்றவள் என்பதை நிரூபித்ததை, சூரிய, சந்திரர்களும், "சீதை

யாதொரு தோஷமும் அற்றவள்'' என்று பிரதிக்ஞை செய்ய வில்லையா? பிறகுதானே நான் அயோத்திக்கு அழைத்து வந்தேன். அப்படியிருக்க இப்பொழுது நகரத்து ஜனங்களும், நாட்டு ஜனங்களும் அவளுடைய நடத்தையைத் தூஷிக்கிறார்கள். அதனால் எனக்கு எல்லையற்ற வருத்தமுண்டாயிருக்கிறது. அபகீர்த்தி தேவர்களால் நிந்திக்கப் படுகிறது. கீர்த்தி எல்லோராலும் கொண்டாடப்படுகிறது. லோகாபவாதத்திற்கு பயந்த நான் ஜானகியைக் கைவிடுவது ஆச்சரியமா? ஆகையால் நாளை அழைத்துப் போய் அவளைக் காட்டில் விட்டுவிடுங்கள் என்று தம்பிமார்களிடம் கூறினார். உடனே தம்பி பரதர் மிக நடுங்கி யாரும் அப்படிச் சீதையைச் சொல்லமாட்டார்கள். எனவே வஞ்சியை காடு போகச்சொல்வது சரியன்று என்றார். அதற்கு உடனே இராமன் தம்பி பரதா, இழிந்த குலத்தில் பிறந்தவனுடைய சொல்லானது என்றும் யாருக்கும் தீமை பயக்காது. கழுதையின் அருகில் மேய்ந்த நற் பசுவானது, பசுவேயன்றிக் கழுதையாகாது. எனவே உலகத்தார்களுடைய அபவாதத்திற்குத்தான் சீதையை காட்டிற்கு அனுப்புகிறேனே தவிர, அவளுடைய நடத்தையில் ஐயங்கொண்டு அல்ல. மேலும் சத்தியவந்தனன அரிச்சந்திரன், தனது குமாரனையும், மனைவியையும் விற்பனை செய்து, தானும் புலையனுக்கு அடிமையாகி சுடலையைக்காத்து, நீதியையும் புகழையும் நிலைநாட்டினான். தன் முன்னோர்களின் பொருட்டு பகீரதன் கங்கையைக் கொண்டுவந்து புகழைத் தேடிக்கொண்டான். எனவே நானும் நாட்டு மக்களின் நலங்களையும், என்னுடைய நீதியையும், நேர்மையையும் நிலைநாட்ட ஜானகியைப் பிரிந்து, ஆரணியத்திற்கு அனுப்புவதைத் தவிர வேறு வழி இல்லை என்றார். ஆகவே யான் துணிந்து செய்யும் காரியத்தை எவ்விதத்திலாவது விலக்க முயலாமல் நீ சுமந்திரனுடன் சென்று சீதையை தேரிலேற்றிக் கொண்டு போய், முனிவர்கள் வாழும் ஆச்சிரமத்துக்கருகில் விட்டு, தாமதம் செய்யாமல் உடனே திரும்பி வா என்று கட்டளையிட்டு, இக்கட்டளையை நீ விரும்பாவிடில் என்னை உன்

கூரியவாளால் கொன்றுவிடு என்று இலக்குவனைப் பார்த்துச் சொன்னார். இவ்வாறு இராமர் சொல்லியதும் பரதனும், சத்துருக்கனனும் அவ்விடத்தை விட்டு நகர்ந்துவிட்டனர். இலக்குவன், இக்கொடிய வார்த்தைகளைச் செவிமடுத்து இப்பாதகச் செயலைச்செய்ய நான்என்ன பாவம் செய்தேனோ என்று கண்ணீர் பெருக தன்னை நொந்துகொண்டான்.

இலக்குவன், சுமந்திரனை அழைத்து, தேர் கொண்டு வரப்பணித்து சீதாதேவி மாளிகையை அடைந்தான். உட் சென்று துஷ்ட நிக்ரகரான ஸ்ரீ இராமன் மனைவியைக் கண்டு அவர் பாதாரவிந்தத்தில் நமஸ்கரித்து, தாயே நம்மிறைவர் தங்களைக்கொண்டுபோய், முனிவர் வாழ்பதி யில் விட்டு விடும்படிக் கட்டளையிட்டார் என்று தெரிவித் தார். உடனே ஜானகி வேளையொன்றும் பாராமல் தேரின் மீது ஏறினாள். மாமிமார்களிடம் சொல்லிக்கொண் டாள். கௌசல்யாதேவி அன்புடன் அணைத்து நீ பதி னன்கு ஆண்டுகள் காட்டில் இருந்தது போதாது என்று இப்பொழுதும் கானகம் பார்க்க விரும்பினாய். உன்னை அனுப்ப எனக்கு மனமில்லையென்றாள். இருப்பினும் சீதை பிரியா விடை பெற்றாள். தேரை இலக்குவன் விரைந்து செலுத்தினான். தனக்கு நேரிடுந் துன்பத்தையறியாமல், தன் நாதன் முதலானோரையும் ஜகத்தையும் விரும்பிக்கூறும் கற்பிற் சிறந்த சீதையின் நற்புத்தியை, இலக்குவன் வியப் பொடு நினைந்த மாத்திரத்தில் தன்னையுமறியாமல் துயரம் மேலிட, அதை அடக்கும் வழிதெரியாமல் தனதிரு கண்களி லும் நீர் அரும்பவிடுத்து, தேரைக் கானகத்தின் நடுவில் நிறுத்தினான். அதனைக் கண்ணுற்ற ஜானகி இளையோய் நீர் துயருற்று வருந்துங் காரணமென்ன என்று வினவினாள். மேலும் இக்கானகம் நான் முன்பு வந்த கானகம் போன்றும் இல்லையே என்றாள்.

இலக்குவன் துக்கம் மேலிட தலைகுனிந்து அயோத்தியிலுள்ளவர்கள் தங்களைப்பற்றி அபவாதமான

வார்த்தைகளைச் சொல்லுகிறார்களாம். சபையிலுள்ளவர்களால் அதைக் கேள்விப்பட்டு, ராமன் என்னை அழைத்து ஆக்ஞாபித்து அரண்மனைக்குச் சென்றார். எனவே லோகாபவாதத்திற்குப் பயந்து இப்படிச் செய்தாரே தவிர, வேறு விதமாய்த் தாங்கள் எண்ணக்கூடாது. மேலும் தாங்கள் மகரிஷியின் ஆசிரமங்களைப் பார்க்கவேண்டும் என்று தாங்கள் ஆசைப்பட்டபடி தங்களை அங்கே கொண்டுபோய் விட வேண்டுமென்று மகாராஜாவின் உத்தரவு என்று நாத் தடுமாறத் தெரிவித்தான்.

இலக்குவன் கூறிய அச்சொல் அக்கினியிற் காய்ச்சிய நாராசமென்ன வைதேகி செவியிற் புகுந்தது. உளம் நைந்து மெய்தளர்ந்து தன்னை மறந்து அவள் பூமியிற் சாய்ந்தாள். இணைபிரிந்த அன்றில் பறவை போன்று அலறி வீழ்ந்த சீதையை இலக்குவன் மயக்கம் தெளிவித்து, ஆறுதல் கூறினார். கண்களில் நீர் பெருகியவாறே சீதை இலக்குவனைப் பார்த்து, அன்று இலங்கையிலரக்கரைக் கொன்று என்னை மீட்டு வந்து, இன்றுவரை அன்புடன் பிரியாமல் இருந்த மன்னர், இப்பொழுது தனியே காட்டில் விட்டு வரச்சொன்னது சங்கரனுடைய திருவிளையாடலோ! அல்லது முற்பிறப்பில் நான் செய்த ஊழ்வினைப் பயனே மன்னவர்க்கு நான் ஒரு வஞ்சகமும் பண்ணவில்லை. அக்கினிப் பிரவேசம் செய்த பிறகுதானே என்னை மன்னவர் அயோத்தி அழைத்து வந்தார். இருப்பினும் என் நடத்தையை தூஷிப்பானேன். அப்படியே தூஷிப்பதானாலும் மைந்தரைப் பெற்ற பிறகு அனுப்பக் கூடாதா? இங்குள்ள ரிஷிகளும், ரிஷிபத்தினிகளும் நீ இங்கே வந்த காரணம் என்ன? உன்னை எதற்காக இராமன் காட்டிற்கு அனுப்பினார்? என்ன பாவம் செய்தாய் என்று கேட்டால் ஒரு பாபத்தையுமறியாத நான் என் சொல்வேன். இதைக்காட்டிலும் இந்த கங்கையில் விழுந்து பிராணனை விடுவது நல்லது. அப்படிச் செய்தாலும் இக்ஷ்வாகு வம்சம் சந்ததியில்லாமல் போகுமே என்று பலவாறாகப் புலம்பினாள். அதைக்கேட்டு இலக்குவன் மனம் நொந்து, சீதையை

வணங்கி, அவள் அநாதையைப்போல் அக்கரையில் பிரமித்து நிற்பதைக் கண்டு, சோகத்தால் இருதயம் பிளந்து வாய்விட்டலறிக்கொண்டு, அயோத்திக்குச் சென்ருன்.

இலக்குவன் ரதம் மறையும் வரையில் சீதை பார்த்துக்கொண்டேயிருந்தாள். அவள் துக்கம் மேலிட்டது. இராமனுடைய திரண்ட தோள்களையும், நல்லவர்கள் பணியும் பாதத்தையும் இனி என்று காண்பேன். என் அருமை மாமிமார்களையும், பரத சத்ருக்கனன் முதலியவர்களையும், குருவாகிய வசிட்டரையும் காணமுடியாமல் தன் இனத்தைப் பிரிந்த மான்போல் இவ்வாரணியத்தில் அலைய நேர்ந்ததே எனப் பலவாறு கதறி அழுது மூர்ச்சையாகி கீழே வீழ்ந்தாள். உடனே அங்கு ஆசிரமத்திலிருந்த வால்மீகி ரிஷி சீதையிருக்குமிடம் வந்து, சீதையைப் பார்த்து அவளுடைய மயக்கத்தை தெளிவித்தார். முனிவரைக்கண்ட சீதை மனம் மிக மகிழ்ந்து அவருடைய பாதம் பணிந்து தெண்டனிட்டாள். முனிவரே இக்கானகத்தில் இனி வேறு துணையில்லை இனி தாங்கள்தான் அடைக்கலம் என்ருள். முனிவர் அவளை ஆசீர்வதித்து நீ யாருடைய மனைவி, உனக்கு தாய், தந்தையர் யார், உன் பெயர் என்ன, நீ இக்கானகத்திற்கு வரக்காரணம் என்ன எனப் பலவாறு வினவினர். அதற்கவள் சீதையென்பேர்; திருத்தமாஞ் செனகராசர் செல்வமாய்ப் பெற்ற பெண் நான்; தரித்த தோர் புகழ்படைத்த தயரதன் மருமகள்; பெருத்த சேனையுடைய பெருமை பொருந்திய அயோத்தி வாழும் இராமன் தேவி நான். தாய், தந்தை சொல்கேட்டு இராமனுடன் வனத்திற்குச் சென்று 14 ஆண்டுகள் வசித்தபொழுது, வஞ்சனையால் இராவணன் இலங்கைக்குத் தூக்கிச்சென்ருன். இலங்கையிலரக்கர் தம்மை இராமனும் வெட்டி வென்று என்னை அழைத்துவந்து, அலங்கிருதச் சீதையானல் அக்கினி முழுகுமென்ருர். நானும் அவர்மொழிக்கு மறுமொழி கூருது தீப்புகுந்து நாதனைக் கூடினேன். அவ்வாறு கூடிய இராமன், இப்பொழுது என் நடத்தையைத் தூஷிக்கிருர்கள் என்ற லோகாபவாதத்திற்கு பயந்து என்னை

காட்டிற்கு அனுப்பிவிட்டார். நிலைபெற்ற புகழ்படைத்த இராமர் நீதியைத்தான் செய்துள்ளார். ஆனால் நான் செய்த தீவினைப் பயனே இக்கானகம் வர நேர்ந்தது. வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாய நூற்களிலும் மார்க்கமில்லை. விண்ணவர்களுக்கும் அரிதாகும். மண் ணவர்களா விலக்கப்போகிறார்கள். முன்செய்த நல்வினைப் பயனால் மாயாப் புகழ்படைத்த இராகவரை மணவாளனாக அடைந்தேன். தீவினைப் பயனால் அன்னவரைப் பிரிந்தேன். இனி இவ்வனத்தில் வசிக்கும் தபோதனர்களின் அடிபேணி, நல்ல விரதாதிகளை அனுஷ்டித்து, எம்முடைய பரமாத்மா கிய ஸ்ரீராமரை சதாகாலமுந் தியானித்துக் கொண்டிருத் தலே எனக்கு மேன்மையைத் தரும் தவமாகும் என்றாள்.

சீதை கர்ப்பவதியாயிருப்பதை அறிந்த முனிவர் அவளை தேற்றி பெண்ணே! உன் வயிற்றில் தரித்துள்ள கர்ப்பத் தில் உள்ள சிசுக்கள், பூதலம் மதிக்கத்தக்க அயோத்தியை அரசாளும் பாக்கியத்தை உடையவராக இருப்பார்கள். எனவே என் சொல்லுக்குப் பணிந்து என்னை உன் தந்தை சனகராஜனாக நினைத்து என் ஆசிரமத்தில் வந்து தங்கு வாயாக. அங்கு உனக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்ய, பணிப்பெண்களையும் அமர்த்துகிறேன் என்றார். பிறகு அவள் விருப்பத்திற்கிணங்கியவாறு சானகிக்கு தனியே ஒரு ஆசிரமம் அமைத்து பணிப்பெண்களையும் நிய மித்தார். அனைவரும் சீதையை விருப்பொடு நடத்தி ஆதரித்து வந்தார்கள். சீதை வால்மீகியமைத்த ஆசிரமத் தில் வசித்து வந்தனள்.

இலக்குவன் சுமந்திரனோடு அயோத்திமேவி, தனது நாதனைப்பணிந்து சீதையைக் கொண்டுபோய் விடுத்துவந்த சேதியைப்பகர, இராமன் துக்க சாகரத்தில் மூழ்கி னான். உடனே பரதன் இராமரை நோக்கி ஒப்புதற்குரிய கற்பையுடைய தீயினும் சிறந்த பரிசுத்தமுடைய சீதையை யும், உம்மையும் பிரித்தது விதிப்பயனேயன்றி, வேறில்லை

என்றான். அதுகேட்டு இராமன் மனத்தேர்ச்சி அடைந்து, முனிவரை யொப்ப வீற்றிருந்தார்.

ஒரு சமயம் யமுனாதீர வாசிகளான ரிஷிகள் இலவணாசுரன் தங்களை இம்சிப்பதாக இராமனிடம் வந்து முறையிட்டார்கள். இராமன் இலவணாசுரனைக் கொல்ல சத்துருக்கனனை அனுப்பினார். வழியில் வால்மீகி ஆசிரமத்தை அடைந்து, அன்றிரவு சத்துருக்கனன் அங்கு தங்கினான். அப்போதுதான் சீதைக்கு இரு குழந்தைகள் பிறந்தார்கள்.

உடனே, முனிகுமாரர்கள் வால்மீகி மகரிஷியிடத்திற்கு வந்து, "சுவாமி! இராமனுடைய பாரியையான சீதை, இரண்டு புத்திரர்களைப் பெற்றிருக்கிறாள். பாலக்கிரக தோஷங்களால் பீடை நேராதபடி இரட்சைகளைச் செய்ய வேண்டும்" என்னும் சுபசெய்தியைத் தெரிவித்தார்கள். உடனே மகரிஷி சீதையிருக்கும் பர்ணசாலைக்குச் சென்று, இரு குமாரர்களையும் பார்த்து கார்போன்ற திருமேனியுடைய ஸ்ரீ ராமனுடைய ரூப லாவண்யத்தை யொத்திருப்பதை உத்தேசித்தும், பால சூரியர்களைப்போன்றும் விளங்குவதைக் கண்டு மகரிஷி பூதங்களாலும், இராக்கதர்களாலும் அவர்களுக்கு யாதொரு தீங்கும் நேராதபடி ஒருபிடி தருப்பையை யெடுத்து, அதை இரண்டாய் அறுத்து, அதற்குரிய மந்திரங்களையும் ஜபித்து அங்கிருந்த தவப்பெண்களிடத்தில் கொடுத்து, இந்தக் குழந்தைகளில் முதலில் பிறந்தவனை இவைகளின் மேல்பாகத்தால் தடவ வேண்டும். மற்றவனைக் கீழ்ப்பாகத்தால் தடவ வேண்டும்' என்று கூறி, 'இந்தக் காரணத்தால் இவர்களுக்குக் குசன், லவன்

என்று பெயருண்டாகும்' எனத் திருநாமமுஞ் சாற்றி, 'இவர்கள் இப்பெயருடன் விசேஷ கீர்த்தி அடைவார்கள்' என்றார். அந்த தவப்பெண்களும் அவ்வாறே செய்தார்கள்.

வால்மீகர் சீதையின் குமாரர்கள் குசன், லவன் ஆகிய இருவருக்கும் எழுத்தறிவித்து, வடமொழியில் அவர்களைத் தேர்ச்சிபெற்றவர்களாக்கி, உபநயனமும் நடத்தி, வேதம், புராணம், இதிகாசம் முதலியவைகளையும் கற்பித்து வைத்தார். அவர் அப்புத்திரர்களின் திறமையை அறிந்து, வேதத்தின் முடிவு தெரிந்துகொள்வதற்காக "அத்யாத்மகம்" என்னும் ஞானபாகத்தையும் உபதேசித்தார்.

வேதம் ஓதுவதற்கும், கடவுளிடத்தில் பக்தி பண்ணுவதற்கும் ஏதுவாகிய கான (இசை)வித்தையையுங் கற்பித்து, யாழ்வாசிப்பதில் நாரத முனிவரைப் பார்க்கிலும் விசேஷப் பயிற்சி உள்ளவர்களாகச் செய்து, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழிசையோடும் இராமசரிதத்தைக் கானம் செய்யப் பயில்வித்தார். எனவே குசன், லவன் என்ற இருவரும் நான்கு வேதம், ஆறு சாத்திரம், தநுசாத்திரம், யானையேற்றம், குதிரையேற்றம், முதலிய எல்லாவற்றிலும் வல்லவர்களாகி எங்கும் சென்று, இராமாயணத்தை, யாழில் அமைத்துக் கானம் செய்தார்கள்.

பாலர்கள் இருவரும் சகல சாத்திரங்களையும் திறமுடன் கற்றிருந்ததை அறிந்த சானகி, அன்புடன் மகிழ்ந்திருந்தாள். இச்சமயத்தில் 'வருணன்' என்பவன், வால்மீகரிடம் வந்து, "தசரதராமன் அசுவமேதயாகம் செய்ய

இருப்பதால், தங்களை உடனே அழைத்துவரச் சொன்னார்'' என்றான். முனிவரும் பாலர்களை அழைத்து, விபரத்தைச் சொல்லிவிட்டு, ''நான் திரும்பி வரும்வரையில் இவ்வாசிரமத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று கூறிச்சென்றார்.

முனிவரைக் கண்டதும், தசரதராமன் பணிந்து, வணங்கி, ஆசனத்தில் அமரச்செய்தார். பின் முனிவரை நோக்கி, ''நான், நாட்டு மக்கள் நலம்பெற, அசுவமேத வேள்வி செய்ய வேண்டுமாதலால், நல்ல நாள் ஒன்று சொல்லவேண்டும்'' என்றார். அதற்கு, முனிவர், ''தரித்த தோர் புகழ்படைத்த தயரதராமனே! கேள். இப்பொழுது நீ அந்த யாகம் செய்ய நினைப்பது முடியாத செயலாகும். ஏனெனில் பொருந்திய இராசலட்சணங்கள் நிறைந்த வெள்ளைக்குதிரை ஒன்று வேண்டும். அது கிடைப்பது அரிது'' என்றார். உடனே ராமர், முனிவர் உரைத்த செய்தியைக் கேட்டு, அயோத்தியில் உள்ள குதிரையெல்லாம் ஓட்டி வந்து பார்க்க, அதில் வெள்ளையாமிலட்சணத்தால் விளங்கவே கண்டு, மிக மகிழ்ந்து முனிவரிடம் கூறினார்.

அந்த சுந்தரப் பரியை முனிவரும் பார்த்து, ''வேள்வி செய்ய இனி தடையேதும் இல்லை. எனவே உன் உறவினர் அனைவருக்கும், வேண்டியவர்களுக்கும் விரைவில் சொல்லி அனுப்புவாயாக'' என்று நாளும் குறித்துத் தந்தார். உடனே தூதர்கள் சென்று, சுக்கிரீவனுக்கும், அனுமனுக்கும், வீடணனுக்கும், மற்றுள பேர்களுக்கும், பொது ஜனங்களுக்கும் அழைப்பு விடுத்தனர். இவற்றையெல்லாம் கண்ணுற்ற வசிட்டர், இராமரிடம், ''மனைவி இல்லாமல் வேள்வி செய்தல் சிறப்பன்று. எனவே இளங்கொடிச்

சீதையில்லாமல் வேள்வி செய்யலாமா? என்று வினவ, இராமர் செய்வதறியாமல், "பொன்னினாற் சீதை உருச் செய்து, வேள்வி செய்வோம்" என்று கூறி, தங்கத்தினால் பதுமையொன்று செய்ய ஆணையிட்டார்.

வேள்விக்குரிய பூர்வாங்க வேலைகள் எல்லாம் முடிந்து, யாகக் குதிரையை நன்கு அலங்கரித்து, பட்டமுங்கட்டி நகரமக்கள் பார்க்கும்படி, பூமிப்பிரதட்சிணம் செய்ய அனுப்பிவிட்டனர். குதிரையுடன் அதற்குக் காவலாக சத்துருக்கனனையும், இலக்குவன் மகன் சந்திரகேதுவையும் உடன் அனுப்பினர். குதிரைக்குக் கட்டியிருந்த பட்டத்தில் கீழ்க்கண்ட வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது.

"இது அயோத்திராஜா ஸ்ரீ ராமச்சந்திரருடைய அசுவமேத யாகக் குதிரை. இந்தக்குதிரை, எந்தெந்த தேசத்தில் எந்தவிதமான தடையுமற்று சுற்றி வருகிறதோ, அந்தந்த தேசங்களில் ஸ்ரீ ராமச்சந்திரரே சக்கரவர்த்தி என்று ஒத்துக்கொள்வதில் யாருக்கும் எந்த விதமான தடையும் கிடையாது. யாருக்காவது தடை இருக்குமேயானால் அவன், குதிரையைத்தடுத்து நிறுத் தட்டும். தடுத்து நிறுத்துபவர்கள் ஸ்ரீ ராமச்சந்திரரிடம் சண்டை செய்யத் தயாராகட்டும்." இவ்வாசகத்தைக் கண்ட மக்கள், கலங்கும்படி, சலங்கைகள் ஒலிக்க, உலக மெல்லாம் சஞ்சரித்த அசுவமானது, முடிவில் முனிவர்கள் வாழும் வனத்தில் நுழைந்து அங்கிருந்த வாழை முதலிய மரங்களை அழித்தது. இதைக் கண்ணுற்ற, லவன் அக் குதிரையைப் பிடித்து இழுத்துவந்து, பட்டத்தில் கட்டி யிருந்த வாசகத்தை வாசித்துப் பார்த்துவிட்டு, அந்த

இராமரே வந்து போரிட்டு அழைத்துச் செல்லட்டும், என்று மரத்தினில் கட்டிவைத்துவிட்டான்.

உடனே அங்கிருந்த மற்ற முனிபாலர்கள் அனைவரும் லவனிடம், "அடே! லவா! இக்குதிரையை விட்டுவிடு, நமக்கு ஏன் இந்த வம்பு" என்றார்கள். அதற்கு லவன், "நான் உங்களைப் போன்று கோழையல்ல. நான் பெரிய வீரன். வில்வித்தை நன்றாகத் தெரியும். உங்களுக்கு அச்சமாக இருப்பின் இங்கிருந்து போய்விடுங்கள். நான் வருகின்ற சேனையுடன் பொருது வெற்றிபெறுகிறேன்" என்றான். இப்படி உரையாடிக்கொண்டே இருக்கும் தருணத்தில் கோடி கோடியான சேனைகளும், குதிரைக் கூட்டம் நாலு கோடியுமாகச் சேர்ந்து சிறுவர்கள் முன்னிலையில் வந்து, "யாகக் குதிரையை யார் பிடித்து வைத்துளார்கள்? அது இராமருடைய அசுவமேதயாகக் குதிரை. யாராயிருந்தாலும் விட்டுவிடுங்கள்" என்று கூறினர். பாலர் அனைவரும் லவனைக் காண்பித்து, "இவன்தான் பிடித்துப் பிணைத்து வைத்துள்ளான்" என்றனர். அனைவரும் உடனே அங்கிருந்து ஓடிவிட்டனர். லவன் மட்டும் தனித்துநின்று சண்டையிட்டு, படைகளை முறியடித்தான். பிறகு ஒவ்வொருவரும் செய்திகேட்டு, சண்டையிட வந்து, அனைவரும் தோற்று ஓடினார்கள். இறுதியில் அனுமனையும் அனுப்ப, அவனும் தோற்றான். முடிவில் சத்துருக்கனனும் சண்டையிட்டு, தோற்று ஓடினான். இவர்களனைவரையும் பாலர்கள் தோற்று ஓடச் செய்த செய்தி, இராமருக்குத் தெரிந்ததும், அவரும், 'அசுவத்துடன் பூமிப் பிரதட்சிணம் சென்ற சத்துருக்கனனையும் காணவில்லையே' என்று நினைத்துக் கொண்டிருந்த சமயம், இச்செய்தி செவிகளுக்கு எட்டவே உடனே, சாம்பவான், அங்கதன், விபீடணன், சுக்கிரீவன்

இவர்களுடன் இராமர். சண்டை நடக்கும் இடத்திற்கு வந்தார். வால்மீகி முனிவரும் பர்ணசாலைக்கு வந்தார். முனிகுமாரர்களும் இங்கு நடந்த நிகழ்ச்சியை, சீதையிடம் சென்று சொல்லியவுடன் சீதையும் அவ்விடத்திற்கு, குசனை அழைத்துக்கொண்டு வந்தாள். வால்மீகி முனிவர் போரிட்டு மயக்கமுற்ற நிலையில் இருந்த அனைவரையும், தன் கமண்டலத்திலுள்ள நீரினால் மூர்ச்சை தெளிவித்தார். பிறகு அனைவரும் மூர்ச்சை தெளிந்து, உறங்கி விழித்தது போன்று எழுந்திருந்தனர். மன்னவர் முனியை நோக்கி, அடிபணிந்து தெண்டனிட்டார். முனிவர் இராமனைப் பார்த்து, "இம் மைந்தர்கள் இருவரும் உன்னுடைய புத்திரர்களே! நீ யாரென்று எண்ண இடமில்லை" என்று கூறிவிட்டு, பாலர்களைப் பார்த்து, "இவர் உங்களுடைய தந்தையான தசரத ராமனேயாவன்" என்றார். மேலும், இராமபிரானைப் பார்த்து, "பண்புகள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற இராமனே! அன்று ஒருநாள், நீ, உலக அபவாதத்திற்கஞ்சி, சீதையைக் காட்டிற்கு அனுப்பிவிட்டாய். ஆரண்யத்தில் சந்தித்த நான், அவள் 'ஐந்துமாத கெர்ப்பிணி' என்பதை அறிந்து, என்னுடைய ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்று, பாதுகாத்து வந்தேன். திங்கள் பத்து சென்றதும், நலமுடன் மைந்தர்களைப் பெற்றாள். அந்தக் குழந்தைகள் தான் உன் எதிரிலுள்ள உன் மைந்தர்கள். எனவே நீ, பாலர் மீதில் இனிமேல் பகைகொள்ளாமல், இருத்தல் வேண்டும்" என்று கூறிவிட்டு, பாலர்களைப் பார்த்து, "உங்கள் தந்தையை திருப்பதம் பணியுங்கள்" என்றார். பாலர்களும் அவ்வாறே செய்தனர். உடனே இராமன் தன் புதல்வர்கள் இருவரையும் மடியில் வைத்து, உச்சி முகர்ந்துகொண்டு, அணைத்துக்கொண்டார். பிறகு இராமரையும், சீதையையும் இணைத்து வைக்க நினைத்துக்கொண்டு, வால்மீகி, இராமரைப்பார்த்து, "நீ செய்யும் அசுவமேத யாகத்திற்குச்

சீதையை அழைத்துச் சென்று, வேள்வி முடித்து, நீங்கள் இருவரும் சேர்ந்து இராஜ்யபரிபாலனம் செய்யவேண்டும்'' என்றார். உடனே, இராமர், ''வால்மீகரே! நீங்கள்தான் இத்தனை நாள் கானகத்தில் அவளுக்கு அடைக்கலம் கொடுத்தீர்கள். எனவே, நீங்கள் அழைத்து வாருங்கள்'' என்றார். பிறகு, முனிவரும் அவ்வாறே சீதையை அழைத்தார். அதற்கு அவள், ''உலகம் என்னை ஏசுதென்று, உலகப் பழிக்கு அஞ்சி, என்னைக் காட்டிற்கு அனுப்பினார். இப்பொழுது அழைத்தால், நான் எங்ஙனம் வர இயலும். மறுபடியும் இராஜ்யத்திலுள்ள மக்கள் என்னை தூற்றிப் பேச மாட்டார்களா? அங்ஙனம் பேச நேர்ந்தால், மன்னர் எனக்கு நீதி சொல்லுவாரா?'' என்றாள். அதற்கு வால்மீகி முனிவர், ''அப்பொழுது இருந்த சூழ்நிலையில் இராமர் அவ்வாறு அனுப்பிவிட்டார். ஆனால் தற்பொழுது, அன்புடன் தங்களை அழைப்பதால், மன்னர் மொழிக்கு மறு மொழி கூறாமல் தாங்கள் அயோத்தி செல்லவேண்டும். மேலும் விதிப்பயன்தான் தாங்கள் கானகம் வர நேர்ந்தது. விதியை வென்றவர்களும் உண்டோ? சத்தியகீர்த்தியான அரிச்சந்திரன், தன் விதிப்பயனாக மனைவி சந்திரமதியை விற்றதும், தன் ஒரே மகன் இறக்க நேர்ந்ததும் தன் இறந்த மகனைச் சுடுகாட்டிற்குக் கொண்டுசென்ற, தன் தேவியை மனைவி என்றும் பாராமல் வாளால் வெட்டியதும் விதியே. ஆகவே, 'விதியை யாராலும் வெல்லுதல் அரிது' என்பதை அறிவாயாக'' என்றுரைத்த மொழிகளைக் கேட்டு, மலர் மகள் சீதை, அயோத்தி செல்ல மனம் ஒப்பினாள். உடனே மணிகள் பொருந்திய தேரிலேறி, யானைகளுங் குதிரைகளும் சேனைகளும் முன்னே செல்ல, தேவர்கள் மலர்மழை பொழிய சீதையும், இராமனும் அயோத்தி சென்றார்கள். முனிவர்கள், திருமகள் சீதையர்க்கும், சீரிய இராமனுக்கும்

பட்டாபிஷேகம் செய்ய வேண்டுமாதலால் நகரை அலங்கரிக்க ஆணையிட்டனர். பின், இராமனுக்கும், சீதைக்கும் பரிமணம் பலவுஞ் சாத்தி, பசும்பொன்னுலலங்கரித்துச் சிம்மாசனத்திலிருத்தி, கைகேயி, கோசலை, சுமித்திரை முதலான அனைவரும் ஆசீர்வதிக்க, சங்கரன், கமலவாசன் முதலான தேவர்களும், தம்பிகள் அனைவரும் மங்கல வாழ்த்துப்பாட, இராமனுக்கு முடிசூட்டப்பட்டது. பிறகு சிறப்புக்கள் பலவும் செய்து, விடைபெற்றுக் கொண்டு சென்றுவிட்டனர். செந்துவர் பவளச் செவ்வாய் சீதையும், இராமனும், மைந்தர்களிருவரோடும், தம்பிமாரோடும், தாய் மூவரோடும் மற்றுமுள்ள சுற்றத்தாரோடும் சிந்தையில் மகிழ்ச்சி பொங்க, செல்வமாய் அயோத்தியில் வாழ்ந்தார்கள்.

# குச, லவன் கதை.

சீரணி யுலகை யாள்வார்
செல்வமும் புகழு முண்டாம்
நாரணன் விளையாட் டெல்லாம்
நன்மையாய்ச் சொல்ல லாகுங்
காரண ராமச் சந்திரன்
கருணையால் பெற்ற மைந்தர்
குச,லவன் பெருங் கதையை*
கூறின பேர் களுக்கே. 1

பசுபதி சுதனு மான
பஞ்சக பாணி காக்கும்
திசைபுகழ் வேலர் காக்கும்
செந்திரு வாணி காக்கும்
தசரத ராமச் சந்திரன்
செல்வமாய்ப் பெற்ற மைந்தர்
குச,லவன் கதையை நன்ருய்க்
கூறின பேர் களுக்கே. 2

மாதவர் முனிவர் வாழ
மாமறை யோர்கள் வாழ
ஆதிமா லயனும் வாழ
அரனுட னுமையும் வாழச்

*எதுகை சரியில்லை.

சீதைதன் மைந்தர் வாழ
தசரத ராமன் வாழ
நீதிசேர் கதையை யானும்
நெறியுட னுரைக்க லுற்றேன். 3

பேரணி குசல வன்றன்
பெருங்கதை கூறி னேனும்
மேரணி அயனூர் வாழு
மியல்புனே வேடப் பிள்ளை
ஆரணம் பொருந்தி வாழும்
அழகன்சே ரருள்தீத் தான்*சொல்
பூரண மான புன்சொல்
புலவர்கள் பொறுக்க வேணும். 4

ஜனமேசெய மன்ன னுக்குத்
தெய்வ மாமுனி தானுரைப்பான்
நலமுடன் சொல்லக் கேளீர்
நன்மை யாயிக் கதைக்கு
வனமது தன்னில் வந்து
மன்னவ ராமச் சந்திர
முனிவர்க ளருளி னாலே
மூரிவெண் சிலேயெ டுத்தான் 5

எடுத்தகைச் சிலேயி னாலே
இராமனு மிலக்கு வந்தான்
படித்தல முள்ள தெல்லாம்
பகழியைக் கண்டு மெச்சத்

---

*இந்நூலாசிரியர், அயனூர் என்பதும், வேடப்பிள்ளையின் மகனை அழகப்பெருமாளின் மகன் வினைதீர்த்தான் என்பதும் 100-வது எண்ணுள்ள சுவடி மூலம் தெளிவாக அறியக்கிடைக்கின்றன.

துடித்திட வரக்கர் சேனை
துளைத்திட வான மேவி
நடுக்க மாய்ப்* போக
நடுங்கின ரிலங்கை யெல்லாம் 6

துணித்தபோ ரிராமச் சந்திரன்
துய்யனற் சீதை யோடே
வணக்கமாம் தம்பி யோடே
வானர சேனை சூழ
கணத்தினி லயோத்தி வந்து
கவுசலா தேவி தன்னைப்
பணிந்துனற் பதம்ப டிந்து
பண்புடன் போற்றி நின்றார். 7

என்றவ ரெழுந்தி ருந்து
இருகரங் கூப்பி ராமன்
கன்றியே நெஞ்ச மெத்தக்
கவுசலா தேவி யாரும்
இன்றுநான் புகழ்ப டைத்தேன்
யென்றவ ளெடுத்த ணைத்து
அன்றுதான் கண்ட தென்று
அடிக்கடி அணைக்க லுற்றாள். 8

எடுத்தநற் கவுச லைதான்
இராமனைப் பார்த்து நின்று
வடித்தவுன் மெய்யி லப்போ
வலியதோர் பாண மேவித்
தடித்தவிற் தழும்பு கண்டேன்
சங்கரா வென்று ரைத்து
படித்தலந் தன்னி லத்தைப்
பார்க்கவோ நானி ருந்தேன். 9

* ? = ஓசை சரியில்லை எழுத்து விடுபட்டுளது போலும்.

இருந்ததோர் முனிவ ரெல்லாம்
இயலுட னுரைக்க லுற்றூர்
திருந்திய ராமன் மீதில்
சேருமோ வரக்கர் பாணம்
வருந்தியே சொல்ல வேண்டாம்
வண்மைசேர் கவுச லாவுன்
குருந்தினுக் கெதிரு மாகக்
குவலயத் தொருவ ரில்லை. 10

முனிவர்க ளருளி னுலே
மொய்குழல் சீதை கூடத்
தனுவுறை பாணி தம்பி
சதிர்புனை பரதர் சூழ
அனைவரு மயோத்தி வந்து
அரண்மனை தனிற் புகுந்து
மனதினில் கபட மற்று
வையகத் தரச ரானுர். 11

மன்னவ ரயோத்தி யெல்லா
மதியுடன் மிகவே யாண்டு
கன்ன(ந்)ற் சீதை யோடே
கருத்தினில் மிகவே வாழ்ந்து
உன்னித மாக நல்ல
உம்பர்கள் மலர்கள் தூவ
பொன்னணி யாச னத்தே
போதவே தாமி ருந்தார். 12

ஆசனந் தனிலி ருந்து
அனைவரும் போற்றி செய்யத்
தே(ச)மை நீதி யாக்ச்
செழிக்கவே அரசை யாண்டு

பூசுரர் முனிவ ரெல்லாம்
　　புகழ்ந்தவர் தாமி ருக்க
நேசமா யெல்ல வர்க்கும்
　　நெறியுடன் வாழ்ந்தி ருந்தார். 13

நீதி யரசன் ரகுநாதர்
　　நிறைந்த குலத்தில் புகழாக
பூத லம்வாழ் புதல்வனுக்குப்
　　போத மிகவே தான்சலித்து
ஆதி யரச ரெல்லாரும்
　　அவர வர்மைந்த ரரசானுர்
போத மிகவேநம் மாலே
　　புத்திர சம்பத் தற்றுமே. 14

" புத்திர சம்பத் தன்றியிலே
　　புகழ்சேர் ராமன் தான்சலித்து
சத்துரு வாக யிக்குலத்தில்
　　தசரதர் வயிற்றில் தான்செனித்தோம்
அத்திர மாக வுரைத்தோ மோ
　　அக்கிரம மாயர சாண்டோமோ
குத்திர மேதென் றறியோமே
　　குலத்தில் கெட(வே) நாமென்ருர் " 15

திருந்து புகழ்சேர் ராமசந்திரர்
　　சிந்தை மிகவே தாஞ்சலித்து
பரந்த புகழ்சேர் பாலரில்லார்
　　பரலோக கதியு மடையாரே
குருந்தொன் றில்லா நம்மாலே
　　குலட்சய மாகப் போகுதென்று
வருந்தி மிகவே யெல்லார்க்கும்
　　மதியுடை யோரு முரைத்தாரே. 16

தளர்ந்து மிகவே ரகுநாதர்
சலித்தே யிருக்கத் தானுமிக
இளங்கொடிச் சீதை யுதரத்தில்
இசைந்த கெர்ப்பந் தான்செனிக்க
தெளிந்த திங்க ளஞ்சுசெல்ல
செகமுழு துள்ளோர் கொண்டாட
களங்க முடனே கனுவொன்று
கருத்துடன் மன்னவர் கண்டாரே. 17

கண்ட கனுவைச் சிந்தித்து
கருணைசேர் ராமன் தான்சலித்து
மண்ட லீகர் வசிட்டர் தம்மை
மதியுட னழைத்து வாருமென்ன
அண்டையில் நின்ற மந்திரிகள்
அதிதீ விரமா யவர்சென்று
புண்டரீ கப்பதம் போற்றிசெய்ய
புகழ்ந்து மிகவே வந்தனனே. 18

வணங்கி மிகவே மந்திரிகள்
மாமுனி தன்னை யழைத்துவர
பரந்த புகழ்சேர் ராமச்சந்திரர்
பாதம் பிடித்துப் பண்புடனே
துணிந்து அவரு மொருவசனம்
சொன்னு ரப்போ நேசமுடன்
அணங்கெ னுஞ்சீ தைதன்னை
ஆரணி யம்விடக் கண்டேனே. 19

இளங்கொடி சீதை தன்னை
இலக்குவன் தேரி லேற்றி
வளந்தெழுக் காட்டில் விட்டு
வரவும்நான் கனவு கண்டேன்
விளங்கிய முனிவ னேகேள்
மொய்குழ லாளை நோக்கி

கலங்கவே மனமு மின்று
சந்தைய மாகு தைய்யா. 20

வில்லுறை பாணி ராமன்
விளம்பினர் முனிவர் முன்னில்
அல்லெனுங் குழலாள் சீதை
அஞ்சுசேர் திங்கள் சென்றாள்
துலங்கிய கலியா ணத்தைத்
துரிதமாய்ச் செய்ய வேணும்
நல்லதோர் சனகர் தம்மை
நலத்துட னழையு மென்றார். 21

என்றவ ரிராமச் சந்திர
ரிலக்குவன் தனைய ழைத்து
இன்றுநீர் சனகர் தம்மை
யியலுட னழையு மென்றார்
அன்றுநற் றேரி லேறி
நாடினர் சீக்கி ரத்தால்
சென்றனர் மிதிலை யுள்ளோர்
சேரவே தாமும் வந்தார். 22

வந்தனர் சனக ராசா
வன்மைசே ரயோத்தி தன்னில்
சிந்தையு மகிழ்ந்து பார்த்து
வந்தனர் ராமர் முன்னில்
சுந்தர மாக வேதான்
தொல்புவி தான்மு ழங்க
மந்திரக் கலியா ணத்தை
வன்மையாய்ச் செய்தி ருந்தார். 23

மகிழ்ந்தனர் முனிவ ரிந்திரர்
வானவர் மற்று ளோரும்

புகழ்ந்தவ(ர்) ராமச் சந்திரர்
போதவே யெல்ல வர்க்கும்
முகந்துனற் றனங்கொ டுத்து
உண்மையா யவரு மப்போ
செகந்தனை யிராம னுக்கு(ச்)
சேரவே தாம ளித்தார். 24

சனகனு மிராச்சி யத்தை(ச்)
சேரவே ராமற் கீந்து
வனமது சென்று அப்போ
மாதவம் புரிய னேக்கி
முனிவர்கள் சூழ மெத்த
முடுகியே வழிகள் சென்று
அனைவரும் புகழ நல்ல
அருந்தவம் புரிய லுற்றார். 25

அருள்புரி சீதை தானும்
அன்புள்ள ராமர் முன்னில்
திரமுடன் மகிழ்ந்தி ருந்து
செப்பினாள் வசன மொன்று
பெரியதோர் வனத்தில் முன்னாள்
பெருமைகள் பார்த்து வந்தோம்
கருணைசேர் முனிவர் வாழுங்
கானகம் பார்க்க வேணும். 26

ஈரேழு வருட மாக
யிருண்டதோர் வனத்தி ருந்து
போராடக் கண்டு நீயும்
போகவே யிச்சை யானாய்
தீராத வினையு மின்று
சேர்ந்தது உன்த னக்கு
தேரேறித் தம்பி பின்னில்
செல்லவுங் கடவை யென்றார். 27

மன்னவர் நாலு பேரை
        மதியுள்ளா ராய ழைத்து
இன்னகர் தன்னில் நம்மை
        யேதுதான் சொல்வ ரென்று
உன்னியே நீங்க ளிப்போ
        உபாயமாய்க் கேட்டு வந்து
என்னையே நோக்கி நின்று
        யியல்புட னுரையு மென்றார். 28

என்றனர் ராமச் சந்திர
        றேற்றமா யேற்றாள் தன்னை
இன்றுநீர் விபர மாக
        யெங்குமே கேட்டு வந்து
ஒன்றுதான் மறந்தி டாம
        லுரைத்திடீர் விடிய வந்து
சென்றுவா வென்று சொல்லி
        சேதியுஞ் செப்பி னாரே. 29

செப்பிய வார்த்தை தன்னை
        தெளியவே கேட்டு நன்றாய்
தப்பறு ஊர்க ளெல்லாஞ்
        சதிருடன் தான்தி ரிந்து
விற்பன ரான பேர்கள்
        விளங்கியே நாலு திக்கும்
முற்பெற வந்து நின்று
        மொழிந்தனர் ராமர் முன்னில் 30

முன்னில்வந்து நின்ற பேரை
        மூரிவெண் சிலையி ராமன்
சிந்தனை பண்ணி மெத்தச்
        சேரவே வாரு மென்று
சுந்தர வயோத்தி தன்னில்
        சொன்னதோர் சேதி யெல்லாம்

மைந்தனுக் கின்ப மாக
யியல்புட னுரையு மென்றார். 31

உரைத்திடா யென்று சொல்லி
யுகந்தவ னின்று கேட்க
திருத்த மாமிராம னாலே
சேரவே பிழைத்தோ மென்று
இருக்கிற பேர்க ளெல்லா
மிப்படித் தானு ரைப்பார்
விருத்த மாயொன்று மிப்போ
விளம்பவு மில்லை யைய்யா. 32

சொன்னதோர் வசன மெல்லாஞ்
சுவர்க்கமே யல்ல வென்று
பன்னியே யவரு மப்போ
பரிவுடன் ஒன்று கேட்க
இன்னக ருள்ள பேர்கள்
இப்படித் தாமு ரைத்தார்
மன்னவர் வேறு மக்கு
வசனமு மில்லை யென்றார். 33

வார்த்தைக ளில்லை யென்ன
மன்னவர் தாமு ரைப்பார்
கீர்த்தியா முங்க ளுக்கு
கிட்டிய தூதர் தம்மை
ராத்திரி அயோத்தி தன்னில்
ராச்சியம் சொன்ன தெல்லாம்
சாத்திடா யெந்த னுக்கு
சற்றுநீ ரஞ்ச வேண்டாம். 34

அஞ்சியே யொருவ னின்று
அரசன்முன் னுரைக்க லுற்றான்

வஞ்சக மாக வண்ணான்
மனையவள் கோப மாகி
விஞ்சிய தனிவ ழிக்கே
வீறுட னோடி வந்தா
ளிஞ்சொல்சேர் தந்தை தாயார்
யேங்கியே தாமி ருந்தார். 35

ஏங்கியே மனம்ந டுங்கி
யினியழை யானே யென்று
பாங்குட னுறவி னுள்ளோர்
பண்புடன் கூடி யேதான்
நீங்கியே வந்த மானை
நெறியுட னழைத்து வந்து
தீங்குடன் வந்த வண்ணான்
சேர்ந்தவ னிராம னென்றான். 36

என்றவ னுரைத்த தெல்லா
மிராமனே கேளு மையா
வன்றுதா னிலங்கை தன்னில்
அரக்கர்தன் னகத்தி ருந்த
நன்றுநற் சீதை தன்னை
நற்குண னிராம னிப்போ
இன்றுநீ ரவரென் றெண்ணி
யெந்தன்முன் கொண்டு வந்தீர். 37

வந்தவர்க் குரைத்த வண்ணான்
வசனமுங் கேட்டு வந்து
சிந்தையில் சிவனே யென்று
செவிதனைப் புதைத்து மெள்ள
வந்துநா னெந்து கொண்டு
மனமிகச் சலித்தி ருந்தேன்
எந்தனுக் கறிய யிப்போ
யினியொன்று மில்லை யைய்யா. 38

## வேறு

வந்த தூதரைத் தாம னுப்பியே
மனது நொந்தன ராமச் சந்திரர்
சிந்தை மேவிய சீதை தன்னையும்
தெண்ட காவனஞ் செல்லு மென்றுதா
னிந்த மாம்மொழி சொல்ல லாகுமோ
ஏது காரண மென்று தான்மிக
தந்தி போலவே மூச்செ றிந்துதான்
தாப மாகியே கோப மாகினர். 39

வெம்பி யேமிக ராமச் சந்திரர்
விழிக ளேதழல் சொரிய வேமிகத்
தம்பி மார்தனை யழையு மென்றுதான்
சாற்றி னர்மிக யேற்ற மாகவே
செம்பொன் மாமணி மார்பர் மூவரும்
தேடி யேயினை பாதம் வீழவே
கொம்பி யேயவர் வெஞ்ச மாகியே
கூறி னர்மனங் கொள்கை தன்னையே. 40

சீதை தன்னையுந் தெண்ட காவனஞ்
செல்ல வேவிட வேணு மென்றுரை
பூத லந்தனி லுள்ள பேர்கள்தான்
போத வேவகை பேசி னர்மிகக்
காதி ராவணன் கொண்டு போனதோர்
கன்னி தன்னை நாங் கூடினே மெனத்
தீது மாகவே சொல்ல லாகுமோ
செய்த காரியம் நன்று மல்லவே. 41

மன்ன ரானவர் செய்த காரியம்
வைய்ய கத்துள்ளோர் செய்வர் காணுமே
கன்னி சீதையைக் காடு தன்னிலே
கடுகி யேவிட வேணு மென்றுதான்

முன்னில் நின்றதோர் தம்பி மாருடன்
முடுகி யேயவர் தாமு ரைத்தன
ரின்ன கர்தனி லெவரு மேசுரார்
எந்த னுக்கிது யியல்பு மல்லவே. 42

வேந்தர் சொன்னது கண்டு தம்பியர்
மிகந டுங்கியே பரதர் சொல்லுவார்
ஆய்ந்தி டாமலே தேவ ரீர்போல்
ஆருரைப் பார்கள் பூத லந்தனில்
பூந்தி ருவெனுஞ் சீதை தன்னையே
பூவ னந்தன்னில் போக வேசொனீர்
சேந்த காரியம் நன்று மல்லவே
சொல்லு வார்களோ யிப்ப டியென. 43

இழிகு லந்தனில்தாரு வானவன்
இஞ்சொ லானது நஞ்சு காணுமோ
கழுதை யண்டையில் மேய்ந்த நற்பசு
கழுதை யாகுமோ பசுவ தன்றியே
பழுது சொல்லுமோ பாத கங்களாய்
பாரி லுள்ளபே ரேசு மென்றுதான்
அழகு மேவிய சான கிக்கினி
ஆரு மொப்பரோ வைய கத்துளே. 44

## வேறு

இளையவன் பரதன் சொல்ல
இயலுடன் கேட்டி ராமன்
வண்மையா மெனக்கு மின்று
வையகத் தோர்க ளுக்கும்
தெளியவே போந்தி ராது
சீதையைச் சீக்கி ரத்தில்
கிளைத்தெழு காட்டி விட்டால்
கீர்த்தியாந் தம்பி கேளாய். 45

## வேறு

யானை யென்ன தேர்க ளென்ன
அடர்ந்த சேனைப் பரிக ளென்ன
சான கியே ஞுண![1] நல்ல
தார ணீயள் தானு மென்ன
மான மில்லா மன்ன னென்று
வைய கத்தோ ரேசு தற்கு
நானு மென்ன நீயு மென்ன
நன்று தானு மல்ல (அல்ல)வே. 46

## வேறு

வணங்கியே இலக்கு மன்தான்
வண்மையா யுரைக்க லுற்றார்
அணங்கெனுஞ் சீதை தன்னை
அனுப்பவுங் கரும மல்ல
துணிந்துதான் தேவ ரீரும்
சொன்னதும் நீதி யல்ல
தணிந்துநீர் பொறுக்க வேணும்
தசரத ராமச் சந்திரா! 47

மனையவள் உரைகள் கேட்டு
மனதினில் கோப மெண்ணி
அனைவரும் பாத்தி ருக்க
அன்னையைப் பிரிவ தொக்கு
மினியது கரும மல்ல
யிராமனே கேளு மய்யா
சனகியைப் போல வேதான்
தரணியி லொருவ ரில்லை. 48

---

1. ஞன என்றுள்ளது

உரைத்திடுந் தம்பி முன்னி
உண்மையாய்ச் சொல்வர் ராமர்
திருத்தமாஞ் சொன்ன திப்போ
செகத்துளோ ரேசு வார்காண்
கருத்துடன் சீதை தன்னைக்
கானகம் விட்டு வந்தால்
பெருத்ததோர் புகழு மாகும்
பெருமையு மடைய லாமே" 49

அரிச்சந்திரன் கீர்த்தி தேடி
அடர்சுடு காட்டி ருந்தான்
கருத்துடன் பகீர தன்தான்
கங்கையை வரவ ழைத்தான்
திருத்தமாம் பெருமை தன்னைத்
தேடியே செகத்தை விட்டார்
விருத்தமே தேடிக் கொண்டோம்
வேறொன்றுந் தேடி யில்லை. 50

உயிரிழந்தால் பார மில்லை
யுலகப வாதங் கேட்கில்
வயல்புனை அயோத்தி விட்டு
வனமது போக நன்று
கயல்விழிச் சீதை தன்னைக்
கானகம் விட்டு வந்தால்
இயல்பிது தம்பி கேளா
யெனக்கிது புகழு மாகும். 51

ஏங்கியே சத்து ருக்க
னின்பமா யுரைக்க லுற்றான்
பாங்குறை அயோத்தி மன்னா
பால்மொழிச் சீதை தன்னை

நீங்கியே காட்டி லோட்ட
        நீதியு மல்ல வையா
தீங்கிது சொல்ல வேண்டாந்
        தேவரீர் தாமு மிப்போ. 52

அக்கினி தன்னில் வீழ்ந்த
        அதிசயச் சீதை தன்னை
உக்கிர மான வார்த்தை
        உரைப்பது தரும மல்ல
இக்குலந் தன்னில் வந்தா
        லிங்குநாம் வாழ்ந்தி ருந்தோம்
மிக்கதோர் வசன மெல்லாம்
        மிகையிது நன்று மல்ல. 53

நின்றனர் ராமச் சந்திரர்
        நெடியதோர் மூச்செ றிந்து
கன்றியே நெஞ்ச மேற்றக்
        கண்கள்நீர் சொரிய வேதான்
இன்றுநீர் சீதை தன்னை
        யெழுந்ததோர் வனத்தி லிட்டு
சென்றுவா ராதி ருந்தால்
        சினந்துநான் காடு போவேன். 54

பரதர்சத் துருக்கர் (தாமும்)
        பயந்தவர் மனையே போனார்
திறமுள்ள யிலக்கு மன்தான்
        சிந்தையு முருகி நின்று
அருவி போல்நீர் சொரிய
        அழுதுகொண் டவரு ரைப்பார்
கருணைசே ரிராமச் சந்திரர்
        காரியங் கேளு மைய்யா. 55

காரிய மல்ல வென்று
இலக்குவர் தாமு ரைக்க
வீரிய கோப மாகி
விளம்பினு ராமச் சந்திரர்
நாரியை* வனத்தில் விட்டு
நன்மைசொல் லாதி ருந்தால்
கூரிய வாளெ டுத்துக்
கொன்றிடா யென்னை யென்ருர். 56

வேறு

இந்தமா மொழிகள்
கேட்டு இலக்குவன்
சிந்தை நொந்து
சிவசிவா யென்றனன்
வந்தபே ரிருவரும்
மனைதனிற் போயினர்.
யென்றன் பாவமோ
யிவ்விடம் நின்றதே. 57

வேறு

தங்கமா மகுட மின்னத்
தரித்தகண் ஞுடி தூக்கித்
துங்கமாங் கொடிகள் வீசத்
துலங்கிய ஆடை பேர்த்துக்
கிங்கிணி முத்து மாலை
கிளைக்கொடி யொலியல் வீச
இங்கிதத் தேரி லேறி
இலக்குமர் நடத்த லுற்ருர். 58

*நாரி = பெண்

## வேறு

சீக்கிர மாகவே
    தேர்தனி லேறியே
நோக்கின ரிலக்குமர்
    ஞெந்த மனத்துடன்
வாக்குள சீதைதன்
    வளமுறு வாசலி
லேக்கம தாகியே
    யிறங்கியே நின்றனர். 59

## வேறு

மனைதனில் போய்ப்பு குந்து
    வஞ்சினற் பதம்ப ணிந்து
மனத்தினில் ஞெந்து கொண்டு
    வசனமொன் றுரைக்க லுற்றார்
முனிவர்கள் மேவி வாழும்
    முடுகிய காடு பார்க்க
சனகிநீர் தா(மு) மிப்போ
    சந்தோஷ மாக வாரும். 60

மன்னவர் முன்னு ரைத்தேன்
    வனத்திலே யிச்சை யாகி
யென்னுட னனுப்பி னாரே
    யியல்புட னும்மை யின்று
நன்னெறி முனிவ ருக்கும்
    நாரியர் தமக்கும் நல்ல
சொன்ன(மும்) மரவு ரியுந்
    துயில்களும்* தானெ டுத்தான். 61

---

*துகில்.

எடுத்தனர் பணிய ளெல்லா
மிணையணித் தேரி லேற்றி
சடக்கென மாமி மாரைச்
சதிருடன் பணிந்து சொல்வாள்
திடத்துடன் வனத்தி லிப்போ
சென்றுநான் வருவே னென்ன
மடக்கொடி சீதை யேநீர்
வாழுவீ ரூழி காலம். 62

வனத்திலே (பதினுன் கான)
வருஷமும் நீயி ருந்தாய்
உனக்கிது கரும மன்று
ஒண்ணுதல் சீதை யேகேள்
நினைத்துநீ யெந்தன் முன்னே
நேசமாய்ச் சொல்ல லாமே
எனக்கிது மனது மல்ல
யென்றனள் கவுச லாதான். 63

கவுசலா தேவி யேநீர்
கருத்துட னுரைக்க வேண்டாம்
அவசியம் நானு மென்று
அடவியள் பார்க்க வேணும்
புவிபுகழ் ராம ரென்னைப்
போய்வாவென் றனுப்பி ஞர்காண்
அவமதி பண்ண வேண்டாம்
அன்னையே அனுப்பு வீரே". 64

அருள்புரிக் கவுச லாள்தான்
அனுப்பினுள் சீதை தன்னை
திரள்மணித் தேரி லேறி
சீக்கிரம் செல்லு மென்ருள்
துரகமு மிழுக்க வஞ்சிச்
சோர்ந்து கீழில் வீழ

இருகையி ஞர் தா மெடுத்து
இலக்குவர் கொண்டு சென்ரூர். 65

## வேறு

அரும்பகலே யோரி கூவ
அருகில்நின்ற நாய்களழக்
கருங்குருவி நரையானுங்
காகமுடனே கழுகிடமாம்
பெரும்புலிகள் செந்நாய்கள்
பேராளி மதயானை
திரும்பிவருங் குறுக்கோடுஞ்
சீதையதுவுங் கண்டாளே. 66

இந்நிமித்தங் கண்டீரோ
இளையவரே யென்றுரைத்து
மன்னவர்க்கு நன்மையாக
மற்றுளபேர் மிகவாழச்
சொன்னமுற்ற வசனமும்
துலங்கிமிக வாழவென்று
கன்னிமிகவே மனங்கலங்கி
கங்கைக்கரையில் வந்தாளே. 67

## வேறு

கங்கையில் முழுகிச் சீதை
கருத்துடன் தேர்நி றுத்தி
எங்குமே பார்க்க நன்ரு
இலக்குமர் பின்னில் நிற்க
அங்கவ ளோட மேறி
அதிசயங் கண்டு பார்க்க
துங்கமா மக்க ரைக்கே
சோலைகள் பா(ர்)த்து நின்ருள். 68

அக்கரை தன்னி லேறி
யாரணியம் பார்த்துப் போக
துக்கித மாக வேதான்
துரகமும் வழிந டக்க
அக்கினி நின்றெ ரிய
அரவமும் பயந்தே யாட
இலக்கும ரிருண்ட காட்டில்
யேங்கியே கொண்டு சென்றான். 69

சந்த னமகில்வி ளாவுஞ்
சாலவே வன்னி புன்னை
கொந்தலர் கொன்றை மாவுங்
கோங்குடன் செண்ப கங்கள்
உந்திய மராம ரமும்
வோங்கிய பலாவ சோகம்
விந்தமாம் வனத்தில் சென்று
வேந்தனு மிகவும் நொந்தார். 70

அரவமும் புலிகள் சிங்கம்
யானைகள் கரடி சென்னாய்
நரியுடன் கலைகள் பன்றி
நல்மிரு கங்கள் மேவும்
பெரியதோர் கான கத்தில்
பிறைநுதற் சீதை தன்னை
பிரியவும் வகைநி னைந்தார்
பேரணி யிளைய வன்றான். 71

என்னையே கொண்டு வந்த
இளையவா சேதி கேளீர்
முன்னில்நாம் வந்த காடு
முனிவர்கள் தம்மைக் காணோம்
மன்னவர் கூட வந்து
மகிமையோ அறிகி லோமே

இன்னக ரின்ன தென்று
யெனக்குரை செய்தி டீரே. 72

கார்குழல் சீதை யேநீர்
கருத்துடன் சேதி கேளீர்
சீரணி அயோத்தி மன்னர்
தெண்டகா வனத்தி லும்மைப்
பேரணி காட்டில் விட்டு
பிரிந்துவா வென்று சொன்னர்
காரண மிதுவே யென்று
மொழிந்தன னிளைய வன்தான். 73

உற்றதோர் மொழிகள் கேட்டு
ஒண்ணுதல் சீதை ஞெந்து
அற்றதோ ரன்றில் போல
அலறியே கீழில் வீழ்ந்தாள்
மெற்றவே களையு மாகி
மேதினி தனிற்ப டிந்தாள்
பற்றியே யெடுத்த ணைத்தான்
பரிவுட னிலக்கு மன்தான். 74

## வேறு

அணைத்தெடுத்து நிழலு மிட்டு
ஆடை கொண்டு விசிறவே
கணத்தி லுற்ற சோகமுங்
கருத்தை விட்டு நீங்கினள்
வணக்க முற்றி லக்குவன்
மனது ஞெந்து சனகிதன்
குணத்தை விட்டு நீங்கவுங்
கூற வஞ்சி நின்றனள். 75

மன்னவர் தமக்கு நானும்
வஞ்சகம் பண்ண வில்லே
முன்புநான் செய்த பாவம்
முடிந்த(ன) யென்த னக்கு
யென்தான் செய்வே ஞனு
மிளையவர் அனுதை யா(க்கி)
கன்றியே (விடுத்தல்) கண்டு
கலங்கியே வுரைக்க லுற்ருள். 76

காட்டிலே யோட்டி விட்ட
காரணஞ் சொல்லு மென்ருள்
வாட்டமா யிலக்கு வன்தான்
மதியுட னுரைக்க லுற்ருர்
நாட்டிலே யுள்ள பேர்கள்
நம்மையே யேசு கின்ருர்
நீட்டிய புகழி ராமன்
செப்பி னரிப்ப டித்தான். 77

இந்தமா மொழிகள் கேட்டு
இளங்கொடிச் சீதை சொல்வாள்
மைந்தரைப் பெற்ற பின்பு
வனத்திலே யோட்டொ ணுதோ
செந்தழல் புகுந்து நானுஞ்
செய்தது கண்டி ருந்துஞ்
சந்தைய* மாகி னேரோ
சதிர்புனே ராம ரிப்போ. 78

திருந்திழைச் சீதை தானுஞ்
செப்பினள் வசன மொன்று
வருந்தியே அரக்க னென்னே
வலுமையா யெடுத்த போது

---

*சந்தையம்—சந்தேகம்

மரங்களைத் தழுவி யேதான்
வஞ்சியென் றுரைத்த ராமன்
பிரிந்தவ ரிருப்ப தில்லை
பெரியதோர் காட்டில் விட்டு. 79

இலங்கையி லரக்கர் தம்மை
இறந்திடக் கொன்றி ராமன்
நலம்பெற வயோத்தி வந்து
நன்மையாய்க் கூடி ஞெரும்
கலங்கவே யென்னை யின்று
காட்டிலே யோட்டி விட்டு
சலங்களே* செய்வ தில்லை
சங்கரன் கற்ப னையோ. 80

கன்றிழந்த பசுப் போலே
கதறியே சீதை நின்று
அன்றுமுத லாக வென்னை
அன்புடன் கூடி ராமர்
நின்றவர் பிரிந்த வாறு
எவ்வகைத் தெய்வ மேதான்
என்ற(ன) ளழுது கொண்டு
யேங்கியே புலம்ப லுற்ருள். 81

## வேறு

நினைத்து நினைத்து நெஞ்சுருகி
நேச முடனே வும்முடைய
கனத்த மதிமு கத்தழகுங்
கமல விழியுங் குண்டலமும்
வனத்தி லரக்கர் தலையறுத்த
வன்சிலை யேந்தி யதுமறந்து
யெனக்கு மிருக்க முடியாது
யினமே பிரிந்த மான்போலே. 82

---

*சலங்களே—?

*சிலையைப் பிடித்த கரத்தழகும்
திண்புயத் தழகுந் திருமார்பும்
நல்முத் ததுபோல் துகிலழகும்
நல்லோர் பணியும் பதத்தழகும்
கலைகற்ற வாயும் பல்லொளியுங்
காணுமல் யானுங் கருத்துடனே
அலையில் துரும்பது போலேதான்
அலையவோ அனுதை யரணியத்தில். 83

## வேறு

மன்னரைக் காண்கி லேனே
மதிபுனை அயோத்தி காணேன்
யென்னுடை மாமி மார்கள்
இயல்புனை பரதர் தம்பி
உன்னிய குருவ சிட்ட
ரொருவருங் காண்கி லேனே
பொன்னணி யாச னத்தை
புகழ்ந்துநான் காண்ப தென்றோ. 84

கருணைசேர் ராமச் சந்திரர்
கதிர்குல ராமச் சந்திரர்
அரியதோ ராமச் சந்திரர்
அயோத்தியில் ராமச் சந்திரர்
இருவருங் கூடி யேதா
னின்பமாய் வாழ்ந்தி ராமல்
பிரிவதென் தெய்வ மேதான்
பெரும்பாவி யாகி னேனே. 85

கன்னிகை யான வன்றே
கானக மிருந்த தன்றி
உன்னிய நாரி யர்போல்
லொருசுக மறிந்தி லேனே

* பாடல் சந்தம் சரியில்லை.

யென்னுட நெஞ்ச கந்தா
　　விரும்பினல் வகுத்த வாறே
மன்னரைப் பிரிந்த யானும்
　　மடியவே காண்கி லேனே. 86

திருத்தமா சீதை தானுஞ்
　　சிந்தையும் ஞெந்து நின்று
இரக்கமா யிளைய வர்க்கு
　　யின்பமா யுரைக்க லுற்ருள்
கருத்தமா னென்னை பின்னுள்
　　காத்துநீர் கொண்டி ருந்தும்
விருத்தமாங் காட்டி லோட்ட
　　விரைந்துநீர் வரவு மாமோ. 87

வீடணன் தன்னைக் கூட்டி
　　விட்டுவா (வெனவொண்) ணுதோ
கூடிய சுக்கி ரீபனைக்
　　கூடவே யனுப்பொ ணுதோ
வாடியே தமையன் வீழ
　　வதைத்தபே ரவர்க ளன்ருே
காடுநீர் விடவே வந்தீர்
　　கருமமோ யிளைய கோவே. 88

சீதையே ராமச் சந்திரன்
　　செப்பிய வுரைகள் கேட்டு
பாதக ஞகி விட்டேன்
　　பரதர்போ லொளித் திடாமல்
தீதுநான் செய்கை யாலே
　　சீவனை விட(வே) வேணு
மேதுநான் செய்வ னென்று
　　இலக்குவர் சலித்து நின்ருர். 89

உற்பல[1] விழிச்சி தானு
    முரைத்தன ளிளைய வர்க்கு
கெர்ப்பிணி யான வென்னைக்
    கிளைத்தெழு காட்டில் விட்டு
கற்பனை செய்வ தில்லை
    கதிர்புனை ராமச் சந்திரன்
முற்பெறச் செய்த பாவம்
    முடிந்தது யென்த னக்கு. 90

### வேறு

வஞ்சகி நானெனென் றுரைக்கும்
    மானி லத்தில் புரண்டுருளும்
அஞ்சிடவே அன்பர்க் குஅய்யோ
    வையோ வைய்யோ வென்றுரைக்கும்
தஞ்சமிரு கங்க ளுண்டினக்குத்
    தரித்த பணியள் தானுதிற்கும்
துஞ்சும் படிக்கு வகைநினைக்குஞ்
    சோரும் விழிக்குந் தோகையறும். 91

### வேறு

மன்னரை நெஞ்சத்தில்
    மறப்பது மில்லை யென்னும்
முன்னிய குருவசிட்ட
    முனிபதம் பணிந்தே னென்னும்
யென்னுட மாமிமார்க
    ளிணையடி போற்றி யென்னும்
பொன்னணி மார்பரேநீர்
    போதவே வாழு மென்றாள். 92

---

[1] உற்பல விழிச்சி—நீலோற்பவ மலரைப்போன்ற விழியை யுடையவள்.

பூமியில் பிறந்த சீதை
புத்தியு முரைக்க லுற்ருள்
ராமரு மும்மை ேனாக்கி
யின்னேர முமக்கு மங்கே
தாமத மென்ன வென்று
சாலவே கோப மாவர்
போமினி யிளையவர் நீர்
புகழ்புனை அயோத்தி தன்னில். 93

கானகத் தெய்வமே காத்தருளீர்
காட்டில் மிருகங்காள் காத்தருளீர்
வானவ ரேநீர் காத்தருளீர்
மாமுனி வோரே காத்தருளீர்
பானு மதியே காத்தருளீர்
(பரமே சுரனே) காத்தருளீர்
சானகி யுங்க ளடைக்கலங்காண்
தப்பா தென்ரு ரிளையவரும். 94

திடத்துட னெழுந்தி ருந்து
சீதையைப் போற்றி செய்து
சடக்கென அனுப்ப வேதான்
சலித்தவர் மனது நொந்து
முடுக்கியே வழிந டக்க
மொய்குழ லாளை ேனாக்கி
அடிக்கடி திரும்பி நின்று
அழுதுகொண் டயோத்தி வந்தார். 95

போனவர் தம்மை நோக்கிப்
புரிகுழல் சீதை தானும்
கானகம் மறைந்த பின்பு
கண்கள்நீர் சொரிய வேதான்
மானிலந் தன்னில் வீழ்ந்து
மயங்கியே மூர்ச்சை யானுள்

மானுட மிருகங்க ளெல்லாம்
வந்தவர் சூழ்ந்து கொண்டார். 96

கலையுடன் புலிகள் சிங்கங்
கரடிகள் வராக மெல்லாம்
தலைதனை யிறங்க விட்டுத்
தளர்ந்தது தானி ருக்கப்
பலபல பட்சி யெல்லாம்
பானுவைத் தான்ம றைத்து
நலமுடன் (ப)ந்த லிட்டு
நாரியைக் காத்த தப்போ. 97

நிழலிடப் பட்சி யெல்லாம்
நீர்தனில் தோய்ந்து வந்து
அழகுசேர் சீதை மெய்யை
அடிக்கடி தான னைக்க
யெழிலுட னெழுந்தி ருந்து
யிளைப்புடன் பார்த்து மெள்ள
அழுதுகொண் டவ்வ னத்தில்
அனுதையா யவளி ருந்தாள். 98

அய்யோ ராமா யிளையோனே
அம்மா தாயே கவுசலையே
பொய்யா மொழிசேர் பாதகிநான்
போதவே பாவங்கள் செய்தேனே
மெய்யா யுயிரை விடவேணும்
வேறொரு கதியும் நமக்கில்லை
செய்யாக் காரியங் காணுமிது
சினத்தால் கெர்ப்பம் தீதாமே. 99

இப்படிச் செய்தால் பாவமென்று
யெழுந்திருந் தவளும் நடமாட

கொப்பளங் கொள்ளக் காலின்மிசைக்
குசையின் மூன்று தைத்தளவில்
மைப்பொரு விழியமுது கொண்டு
வனத்தைப் பார்த்து மனஞ்சலிக்க
செப்ப முடனே வான்மீகர்
சீடருடனே வந்து நின்றார். 100

காட்ட முங்குசை யுந்தேடி
கருணை முனிவன் சீடனுடன்
நாட்ட முடனே வந்துநிற்க
நளின விழியாள் தான்கண்டு
வாட்ட முடனே நின்றவளும்
மகிழ்ந்து புளகித்து மனந்தெளிந்து
தீட்டு புகழ்சேர் பதங்கள் பிடித்து
திருந்து மிகவே தண்டனிட்டாள். 101

மண்டல முழுது மெச்சு
மாதவ முனிவ னேனுன்
அண்டினே னும்மை யின்று
அடைக்கல முமக்கு நானே
விண்டுசேர் வனத்தில் வந்தேன்
வேறொருவ ரில்லை யய்யா
கண்டுநான் மனந்தெ ளிந்தேன்
காத்திடீ ரென்னை யென்றாள். 102

இந்தமா வனத்தி லேதான்
இயலுடன் நீயு முன்னாள்
வந்தது போல வின்று
மனத்திலே காண்கு தென்று
சுந்தர முகமு மிப்போ
தோன்றுது கண்ட தேபோல்
சந்தைய மினக்கு மின்று
சதிருடன் முனியு ரைத்தார். 103

அஞ்சியே சொல்ல வேண்டா
மாருட பாரி நீர்தாம்
தஞ்சமாய்ப் பெற்றெ டுத்த
தந்தைதா யெவரு னக்கு
நஞ்செனும் விழியி னாளே
நாமமு மேது னக்கு
வஞ்சனை யாக வந்த
வகைதனைச் சொல்லு மென்றார். 104

உரைத்தனள் மாமு னிக்கு
யொன்றுதல் சீதை யென்பேர்
திருத்தமாஞ் செனக ராசர்
செவ்வமாய்ப் பெற்ற பெண்ணான்
தரித்ததோர் புகழ்ப டைத்த
தயரதர் மருகள் ளானே
பெருத்ததோ ரயோத்தி வாழும்
பேரணி யிராமன் தேவி. 105

தந்தை தாயுரைகள் கேட்ட
தயரத ராம னோடே
இந்தமா வனத்தில் வந்தே
னியல்புனை முனியே கேளீர்
அந்தர மாக வென்னை
யரக்கனுங் கொண்டு போனான்
வந்தன ரவரு மப்போ
வலியதோ ரிலங்கை தன்னில் 106

இலங்கையி லரக்கர் தம்மை
இராமனும் வெட்டி வென்று
துலங்கவே யெனைய ழைத்து
சொன்ன னல்வசன மொன்று
அலங்கிறுதச் சீதை யானு
லக்கினி முழுகு மென்றார்

நலம்பெறத் தீப்பு குந்து
　　நாதனைக் கூடி னேனுன். 107

கூடிய ராம னிப்போ
　　குவலைய மேசு தன்று
காடுநீ போவை யென்று
　　கற்பனை செய்து விட்டார்
நீடிய புகழ்ப டைத்தோர்
　　நீதியே செய்வ ரய்யா
தேடிய பாவத் தாலே
　　சீதையு மாகி னேனுன். 108

கூர்வி ழிநீர் சொரியக்
　　கொடியிடைச் சீதை சொல்வாள்
பேரருள் முனிவனே நான்
　　பெருவனத் தனுதை யானேன்
யேரணி சிலையி ராம
　　னென்னையே பிரிந்து விட்டார்
பாரமே நானு மக்குப்
　　பாதமே கெதியு மென்றுள். 109

இந்துசேர் முகத்தி னுளே
　　இளங்கொடிச் சீதை யேகேள்
தந்தை தானுனக்கு நானுஞ்
　　சற்று நீயஞ்ச வேண்டாம்
எந்தனைச் சனக ராசன்
　　யேற்றமாய்ப் போற்றி செய்வ
னிந்தமா வனத்தை விட்டு
　　யென்னுட அகத்தில் வாரும். 110

சீதை யேஉன் வயிற்றில்
　　திருந்தவே தரித்த கர்ப்பம்

பூதல மதிக்க வேதான்
புத்திர ரிருவர் பெற்று
ஆதிசே ரயோத்தி யாள
அவர்களே கடவ ரென்று
தீதிலா ஆச்சிர மத்தில்
செல்லு வாயென வுரைத்தார். 111

நம்முட ஆச்சிர மத்தில்
நாரியர் தாமு முண்டு
செம்மையாய்க் கொண்டி ருந்த
செல்வமும் பெறுகு விப்பார்
யெம்முட பின்னில் நீயு
மியலுடன் வருவா யென்ன
அம்மடந் தன்னி லப்போ
அடைந்தன ளார ணங்கு. 112

அருளுடன் சான கிக்கு
ஆச்சிரமங் கட்டி வித்து
திடமுடன் திங்கள் பத்துஞ்
சென்றது நிறைய வேதான்
பெருமைசேர் முனிகள் நாரி
பிள்ளையும் பெறுதி வித்துக்
கருணைசேர் முனிவ னுக்கு
கடுகவே சொல்லு மென்ருள். 113

மைந்தர்க ளிருவ ருக்கும்
வானவர் மலர்கள் தூவத்
துந்துமி வாத்தி யங்கள்
துலங்கவே தான்மு ழங்க
இந்திரர் முனிவ ரெல்லாம்
யெங்குமே கீத மூத
வந்துவான் மீக ரப்போ
வழங்கினர் தான மெத்த. 114

கூர்முனி பாலர் தம்மை
குசையினுல் துடைத்து மெள்ள
சீரணி துளிரி ஞலே
சிறுவனைத் தான்து டைத்து
பேரிட வேணு மென்று
பிரியமா யுலகு மெச்சப்
பூரண மாக வேதான்
புரிந்தன ஞம மப்போ. 115

குசலவ னென்று சொல்லி
கூறியே பேரு மிட்டுத்
திசைபெறச் சிகையும் வைத்து
செய்ததோர் புகழ்ப டைத்துக்
கசிவுடன் சீதை யப்போ
கருணையாய்ப் புகழ வேதான்
இசைத்தவ முனியும் நன்ருய்
விளங்கினுர் மேதி னிக்கே. 116

அருள்முனி பால ருக்கே
அன்புடன் சிகையும் வைத்து
வருஷமும் பன்னி ரெண்டு
வண்மையாய்ச் சென்ற பின்பு
கருணை முன்னூ லு மிட்டுக்
கருத்துடன் பால தீட்சை
நலமுடன் பண்ணி வித்து
செல்வமாய்க் கொண்டி ருந்தார். 117

மைந்தர்கள் தனைய ழைத்து
மாமுனி தாமு ரைத்தார்
தந்திர மாக வேதான்
தனுவணி சாத்தி ரங்கள்
மந்திர முள்ள தெல்லாம்
மதியுடன் சொல்லு மென்ன

இந்த நற்சாத்தி ரங்க
ளியலுட னுரைக்க லுற்றார். 118

திறமுடன் சாத்தி ரங்கள்
சிறுவருங் கற்ற பின்பு
அருளுடன் சான கியு
மன்புடன் மகிழ்ந்தி ருந்தார்
கருணைவான் மீகர் தம்மைக்
கருத்துட னழைக்க வேண்டி
வருணனும் வந்து நின்று
மதியுட னுரைக்க லுற்றான். 119

உத்தம வேள்வி தன்னை
யுண்மையாய்ப் பண்ணரி விக்க
பத்தியாய் வரவே வேணும்
பாதாள வுலகு தன்னில்
நித்தனே முனிவ னேநீர்
நேசமாய் வாரு மென்ன
சித்தமு மகிழ்ந்து ரைத்தார்
சீர்முனி வாரோ மென்று. 120

பாலரைத் தாம ழைத்து
பண்புசேர் முனியு ரைப்பார்
சீலமாம் வருண யாகஞ்
செய்யநாம் போக வேணுஞ்
சோலைசேர் புனத்தைச் சுற்றிப்
பேணியே காத்தி ருங்கோள்
கோலமாங் குசைச மித்து
கொண்டுவா வொருவ னென்றார். 121

உயர்(மா) முனிபா தாள
வுலகில் போன பின்பு

வயல்புனே அயோத்தி வாழ
மன்னவ ரேது ரைப்பார்
இயலுட னசுவ மேத
யாகமும் பண்ண வேணும்
நலமுடன் வசிட்டர் தம்மை
நாடியே அழையு மென்ருர். 122

அருந்தவ வசிட்டர் தம்மை
யழைத்தவர் வந்த பின்பு
திருந்தவே பதம்பி டித்துச்
செப்பினு(ர்) ராமச் சந்திரர்
விரும்பியே யசுவ மேத
வேள்வியுஞ் செய்ய வேணும்
பொருந்திய நானு மொன்று
புகழ்ந்து நீர்புகலு வீரே. 123

தரித்ததோர் புகழ்ப டைத்த
தயரத ராம னேகேள்
கருத்துடன் வேள்வி செய்யக்
கருணையா யுரைக்க லுற்றீர்
திருத்தமா யி(ந்த)ப் பொழுது
செய்யவு(ம்) அருமை யென்று
உரைத்ததோர் தவ(மா) முனியு
முண்மையா யுரைக்க லுற்ருர். 124

எங்குமே புகழ்ப டைத்த
இராமனே சேதி கேளீர்
துங்கமாந் துரக மொன்று
துய்ய வேணு மிப்போ
இங்கிது தானு மில்லை
யெப்படி வேள்வி செய்வீ
ருங்களால் முடியா தென்று
(உற்)றவ ருரைக்க லுற்ருர். 125

தெள்ளிய முனியு ரைத்த
சேதியைக் கேட்டி ராம
னுள்ளதோர் குதிரை யெல்லாம்
வோட்டியே வந்து பார்க்க
வெள்ளையா மிலக்ஷ ணத்தால்
விளங்கவே கண்டு தென்று
உள்ளமு மகிழ்ந்து னின்று
வுண்மையாம் வேள்வி யென்றார். 126

சுந்தரப் பரியை நன்றாய்
துய்யதோர் முனியும் பார்த்து
விந்தைசேர் ராம னுக்கு
வேள்வியு முகியு மென்று
சிந்தையு மகிழ்ந்து மின்று
திடத்துடன் வேண போர்க்குச்
சந்தைய மன்றி நீருஞ்
சடுதியில் சொல்லு மென்றார். 127

வேறு

அரிக்குல வேந்தன் சுக்கிரீப
னனும னனரக்கன் வீடணற்குந்
திருத்த முடனே நம்மைமிகச்
சேர்ந்த வுறவின் மன்னவர்க்கும்
கருத்துடன் ராமன் செய்வேள்வி
கசிவுடன் பார்க்க வாருமென்று
வருத்த முடனே தூதர்சென்று
மதியுட னழைத்து வாருமென்றார். 128

வந்தவ ரயோத்தி தன்னில்
மற்றுள பேர்க ளெல்லாம்
மந்திர வசிட்ட ரப்போ
வசனமொன் றுரைக்க லுற்றா

ரிந்துசேர் முகத்தை யொத்த
யிளங்கொடிச் சீதை யில்லா
உந்திய வேள்வி யுண்டோ
வுற்றதோ ருலகு தன்னில் 129

மன்னவ ரிராமச் சந்திரன்
மாமுனி யுரைகள் கேட்டு
பொன்னிறச் சீதை தன்னைப்
புகழ்ந்துநாம் பண்ணி வித்து
உன்னித வேள்வி யின்று
வுற்றுநாஞ் செய்ய லாகுங்
கன்னிபோல் காஞ்ச னத்தால்
கடுகவே சமையு மென்றார். 130

தார்குழல் சீதை போலத்
தங்கத்தால் பண்ணி வித்து
சீரணி வேள்வி தன்னை
செய்யவே தான்து வக்கி
வீரிய குதிரை தன்னை
விளங்கவே அலங்க ரித்து
பாருளோர் புகழ நல்ல
பட்டமுங் கொண்டு வந்தார். 131

பட்டமுங் கொண்டு வந்து
பரிதனில் தான ணிந்து
சிட்டர்சேர் ராமச் சந்திரன்
சிலைதனில் வீர ரென்று
நட்டனை யெழுதி யப்போ
நகரியோர் பார்க்க வென்று
விட்டண் புரவி தன்னை
விளங்கவே யுலக மெல்லாம். 132

தம்பிநீ சத்து ருக்கர்
சதிரங்கச் சேனை யோட
கொம்பியே குதிரை தன்னைக்
கூடவே காத்துப் போவா
யம்புவி தான்மு ழங்க
யானைகள் பரிகள் தேரும்
கம்பிக மாக வேதான்
நடந்தன ரயோத்தி விட்டு. 133

சதங்கைகள் மிகுந்து கொஞ்சத்
தாளினை வெண்ட யங்கள்
புலம்பு வேகிண் கிணிகள்
பூதல மன்ன ரெல்லாங்
கலங்கவே தான டுங்க
கனத்ததோர் பட்ட மின்ன
அலங்கிறுத மாக வெங்கும்
அசுவமும் சஞ்ச ரிக்கும். 134

கண்டதோர் மன்ன ரெல்லாங்
கலங்கவே புரவி பார்த்து
மண்டியே யுலக மெல்லாம்
மயங்கவே சஞ்ச ரிக்க
அண்டிய வரசர் தன்னை
அறுத்தனர் சத்து ருக்கர்
விண்டுதான் முனிவ னத்தில்
வீறுடன் வந்து தப்போ. 135

வனத்திலே வந்து சேர
வாழையைத் தான்மு றிக்க
சினத்துட னவனு மோடி
சிக்கெனப் பிடித்து வந்து
கனத்தபேர் பட்டந் த(ன்னைக்)
கருத்துடன் பறித்து வைத்து

மனத்தினில் வலிய வீரன்
　　மாயையுங் கட்டி வைத்தான். 136
பிடித்துக் கொண்டு புரவிதன்னை
　　பிடவை யதனுல் பிணைத்தெழுந்த
முடித்துக் கட்டியே வாழைதன்னில்
　　முளரி விழிபோல் லவனும்நின்று
வடித்த பொற்பட் டந்தன்னை
　　வாசித் ததனைப் பார்த்தளவில்
கடித்த புகழ்சே ராமச்சந்திரர்
　　சகத்தில் வீர ரில்லையென்ருர். 137

வீரனும் ராம னன்றி
　　வேருருவ ரில்லை யோதான்
தார்குழல் சீதை மைந்தர்
　　தாட்டீகர் தாமு மன்ருே
கூரணி வாளி விட்டுக்
　　கொல்லுவேன் பாரு மென்று
சீரணி பாலர் நின்று
　　சினத்தவன் சிலையெ டுத்தான். 138

ஒக்கவே நின்ற பாலர்
　　உற்றவர் சொல்ல லுற்ருர்
மிக்கதோர் குதிரை தன்னை
　　விரைவதும் நீதி யல்ல
பக்கமே நின்று நாமும்
　　பார்த்து கரும மல்ல
இக்கணம் மூரில் நாமும்
　　இயல்புடன் போவோ மென்பார். 139

கூடி நின்ற பாலருங்
　　கூறி ஞர்கள் வேகமாய்
நாடி வந்த மாவையு
　　நடுங்க யின்று கட்டினே

யோடி யேநீர் போகுவாய்
        யுன்னை யின்று போகவும்
தேடி நின்று பாலரும்
        சினப்பர் காண்ம னத்திலே. 140

வீரிய லவனு மன்று
        விளம்பினன் வசன மொன்று
சூரியன் குலத்து மன்ன
        சுதனல்ல நாமு மின்று
ஆரண முனிவர் பெற்ற
        அன்புள பாலர் நாங்கள்
தூரவே நின்று பாரும்
        தொடுத்ததோர் பாண மெல்லாம். 141

சேனைகள் கோடி கோடி
        திரள்பரி நாலு கோடி
யானைகள் ரெண்டு கோடி
        அணிமணித் தேர்கள் கோடி
மானிலந் துள்கி ளம்ப
        மலைகளும் பொடிக ளாக
வானவர் பார்த்தி ருக்க
        வந்தனர் பாலர் முன்னில் 142

பரிதனைக் கட்டி நீரோ
        பாலரே யென்று கேட்க
விரகறி யாத நாங்கள்
        விளையாட யாங்கு வந்தோம்
ஒருவனே கட்டி வைத்தான்
        வொன்பது பேரும் நின்று
கருமமு மல்ல வன்றோ
        கட்டினன் பால னிப்போ. 143

கட்டியே பாலன் முன்னில்
கெடியெனச் சேனை வந்து
விட்டிடாப் பரியை யென்று
வீறுட னுரைக்க லுற்றார்
கட்டியே வைத்த நீயோ
கருத்துடன் சொல்லு மென்ன
வெட்டியே வெல்வை யானல்
விடுவனென் றுரைக்க லுற்றான். 144

நகைத்தவர் குதிரை தன்னை
நாடியே விடவும் வந்தார்
பகைத்தவர் பால னெய்யப்
பட்டவர் கீழில் வீழ்ந்தார்
செகத்தையு மளாவி வந்த
சேனையும் மோதுகின்றார்
மிகுத்தவர் சேர வேதான்
வெகுண்ட(வர்) சேர வந்தார். 145

சிலைதனில் வலிய வீரன்
சிறுவனு முரைக்க லுற்றான்
மலையெனப் பஞ்சம் வந்தால்
மனமுன்னே தீரு மாமோ
கலமுடன் திரிபு ரத்தைச்
சங்க(ர)ன் நகைத் தெரித்த
நலமெனும் வடிவு மாக
நறுக்குவேன் சேனை யெல்லாம். 146

பொருதிடுஞ் சேனை யெல்லாம்
பொடிபடக் கணைக ளேவிக்
கரியுடன் புரவி தன்னை
கனத்தினில் வீழ வோட்டிப்
பெரியநற் கருணைதொ டுத்துப்
பிளக்கவே சார தீயை

வெருவியே பால னெய்ய
வீழ்ந்தனர் சோர வப்போ. 147

திறத்துடன் வந்த சேனை
சிறுவனைச் சூழ்ந்து கொண்டார்
அறுத்தநன் கணைக ளேவி
ஆறுபோ லுதிர மோடத்
தரித்தநன் புரவி தன்னை
தாரணி தன்னில் வீழ
உறுக்கினன் பால னின்று
ஓடவே சேனை யெல்லாம். 148

ஓடியே சேனை புக்கு
உற்றதோர் வாளி யேவி
சாடினன் தந்த (மா)வை
சற்றவர் கூப்பி டாமல்
நீடிய குன்று போல
நிபுடமாய் வாழவே கண்டு
கூடினன் சத்து ருக்கன்
கொடியதோர் பாலர் முன்னில் 149

முடுக்கினன் சத்து ருக்கன்
மூன்றுநாள் பகழி விட்டு
கடித்ததோர் பாலர் மேலே
சரமிகத் தான முந்த
வடித்தநற் தாம ரைப்பூ
வந்துதான் தூவித் தென்ன
திடத்துட னகைத்து நின்ருன்
சீதையை நினைந்து கொண்டே. 150

பேரணி சத்து ருக்கன்
பிடித்ததைச் சிலைய றுத்து

வீரிய மாகவே தான்
விளங்கினுர் பால னின்று
தார்குழல் சீதை தன்னைச்
சதிருடன் போற்றி செய்து
யேரணி சிலையை வாங்கி
யியலுடன் நாணெ றிந்தான். 151

ஓடியே வந்து மன்னன்
ஒடிந்ததோர் வில்லி னுலே
நாடியே பால னைத்தான்
நடுங்கவே விழவ டித்தான்
வாடியே னொந்து வீழ்ந்து
வலியதோர் சிலையும் விட்டு
நீடிய பூமி தன்னில்
நினைவறத் தான்வி ழுந்தார். 152

எடுத்தனன் சத்து ருக்கன்
ராமனே ரூப மென்று
துடைத்தனன் மெய்மை மெத்தச்
சுனைதனில் நீரி னுலே
சடக்கெனப் பாலன் தன்னைச்
சதிருடன் தேரி லேற்றி
விடுத்தனன் குதிரை தன்னை
வேந்தனும் திரும்பி னுனே. 153

ஓடினுர் முனிதன் பாலர்
ஒன்றுதல் சீதை தன்னில்
கூடியே தானு ரைப்பார்
கூரா விழிநீர் சொரிய
நாடியே வந்த மாவை
நடுங்கவே கட்டி வைத்து
தேடியே வந்த பேரை
சிறுவனே சிரம றுத்தான். 154

சேனையு மாண்ட பின்பு
சினத்துடன் மன்னன் வந்து
மானிலந் தன்னில் வீழ
மைந்தனைத் தான டித்தான்
சானகி யுந்த னக்கு
சடுதியில் சொல்ல வந்தோம்
மூனமோ பிழைப்ப னேதா
னுற்றது மறிகி லோமே. 155

மைந்தனைத் தான டித்து
மணியணித் தேரி லேற்றி
வந்தவன் கொண்டு போனான்
வஞ்சியே கேளு மம்மா
சுந்தரச் சீதை கேட்டு
சோர்ந்தவள் கீழில் வீழ்ந்து
சிந்தனை வந்து தோதான்
சிறுவனைத்தா னடிக்க வென்றாள். 156

அடிக்குமோ கையெ ழுந்து
அரசனே யாக்கு மாகில்
படித்தலந் தன்னி லித்தைப்
பார்க்கவே யிச்சை யானுய்
துடித்தவள் கீழில் வீழ்ந்து
துள்ளியே யெழுந்தி ருந்து
மிடுக்கினல் கொண்டு போற
வேந்தனல் பாவி யென்றாள். 157

புலம்பியே அழுது கொண்டு
புதல்வனை நோக்கி நின்று
அலங்கிறுதச் சீதை தானும்
கோப மாயு ரைப்பாள்
கலங்கியே மைந்தன் வீழக்
கருத்துட னடித்த பாவி

நலங்கவே வளைந்து வெட்ட
நம்முடை குசனு மில்லை. 158

வந்தனன் குசனு மப்போ
வனத்திலு மனையை நோக்கி
யென் துணைத் தம்பி தன்னை
யெதிர்வரக் காணே னென்று
சிந்தனை பண்ணி நின்று
சீதையைப் போற்றி செய்து
நொந்தனை அன்னை யேநீர்
நோக்கியே யுரையு மென்றான். 159

பூவனந் தன்னில் நின்று
புதல்வனுங் குதிரை கட்ட
சேனைகள் திரண்டு வந்து
செத்தனர் தம்பி யாலே
பாவியு மான மன்னன்
பார்தனில் வீழவ டித்து
தாவியே தேரில் வைத்துக்
கடுகியே கொண்டு போனான். 160

உந்தனற் கிறுபையி னாலே
உற்றுநான் வாளி விட்டால்
சுந்தரத் தானு மென்ன
அசுரர்கள் தானு மென்ன
இந்திர னாகி லுந்தான்
யெந்த னுக்கெதிரு மல்ல
சிந்தனை செய்ய வேண்டாம்
சிலைதனைத் தருவா யன்னே, 161

குசனே நீ தம்பி தன்னை
கொண்டுபோ மன்னன் தன்னை

விசையினுல் வெட்டி வெல்ல
வேறில்லே யுன்னே ய(ன்று)
மசகமாய்ச் சேனே போக
வனசர மேவி நின்று
திசையினுல் தம்பி கூடத்
திரும்புவாய் தம்பி நீயும். 162

பட்டையம் பரிசை கட்டி
பாரிய சிலேயும் வாளி
திட்டெனத் தானெ டுத்து
திடத்துடன் கவச மிட்டு
மட்டறப் போற சேனே
மடிய(வே) (பா)ற்க வென்று
கிட்டியே குசனும் வந்த
கெடிதனேச் சேனே கண்டார். 163

அண்டியே சேனே யெல்லாம்
அரசன்முன் னுரைக்க லுற்ருர்
அண்டனே அமரா சுரனே
சங்கரன் தூதன் தானே
கொண்டல்சேர் நிறத்தின் மாவோ
குமாரனே வாற வன்தான்
அண்டமு நடுங்கு தய்யா
அடைக்கல முமக்குத் தானே. 164

வந்தவ னுரைக்க லுற்ருன்
(ம)றலிபோல் குசனும் நின்று
எந்தனற் சிலேயி னுலே
யேங்கியே சாக வேண்டா
மிங்குநற் புரவி தம்பி
யிங்குநீர் விட்டு மெள்ள
உந்தனுர் உயிர் பிழைக்க
வோடுவீ ரோடு வீரே. 165

சேனதி பதியும் வந்து
சினத்துட னெதுத்து நின்ருன்
வானேர்கள் பாத்தி ரு(க்க)
(வண்ணமாம்) புரவி தன்னை(த்)
தானுக நிறுத்து விட்டு
நெறுக்கினுன் சேனை மாளப்
போனர்கள் பொடியு மாகப்
பொருத்தோர் (போரி லேதான்). 166

ஆனைகள் பட்டு வீழ
அடர்ந்தனற் புரவி வீழச்
சேனையு மாண்டு போக
மானிலங் குருதி யானுய்
மதகரி கீழில் (வீழச்)
(மற்றவர் எதிர்த்து ஓட)
சானகி மைந்தர் நின்று
சரத்தினுல் வென்று நின்ருர். 167

செத்த சேன பதிக்குத்
திடத்துடன் தம்பி யானேன்
மத்தகக்கரி தன்னி லேறி
வந்தவனி வந்தா னெதுத்தான்
மெத்தவே கணைக ளேவி
விட்டனன் குசனும் நின்று
அத்தியுந் தானு மப்போ
அலறியே கீழில் (வீழ்ந்தான்) 168

வஞ்சமாய் சத்து ருக்கன்
விட்டனன் பாண மேவி
நஞ்சுபோல் வந்த பாண
மறுத்தனன் குசனும் நின்று
விஞ்சிய சிலைவ ளைத்து
விட்டனன் நஞ்சு பாணம்

துஞ்சியே கீழில் வீழ்ந்து
சோர்ந்தவன் மூர்ச்சை யானன். 169

தேரிலு மெழு(ந்து நின்ற)
(சிறந்தவன்) லவனும் வந்து
சீரணி குசனை னேக்கி
திருப்பதந் தெண்ட னிட்டான்
பேரணி குதிரை தன்னை(ப்)
(பிடித்தனன் சற்றே) யங்கே
வீரிய மாக வேதான்
விளங்கினர் மேதி னிக்கே. 170

தூதரு மயோத்தி வந்து
சொன்ன(தோர் பதட்ட வார்த்தைச்)
சேதிகேள் சத்து ருக்கன்
சேனையு மாண்டு தய்யா
நாதனே அமரர் கோவே
நாங்களும் தப்பி வந்தோம்
பூதலம் புகழு நல்ல
(புத)ல்வனுக் கெதிரு மல்ல. 171

மயங்கியே விழுந்து ராமன்
மதியுடன் தானு ரைப்பான்
பயந்து(நீ புகழந்து ரைத்த)
பாலரா ரென்று கேட்க
உயர்ந்தநற் குலத்தி லுள்ளோர்
உருவமுந் தேவ ரீரே
நயந்த (நற்)சொற் கேட்டி
நாடினர் தம்பி தன்னை. 172

இலக்குவன் தனைய ழைத்து
ராமனு மேது ரைப்பார்

சிக்கெனப் பாலர் தம்மை
(தேரி)லே கட்டி யேற்றி
மிக்கதோர் தம்பி கூட
விட்டனர் புரவி கூட
இக்கணம் போய ழைத்து
யிங்குநீ திரும்பு வாயே. 173

மன்னரைத் தெண்ட னிட்டு
மதிபுனை யிளைய வன்தான்
சொன்னதோர் மொழிகள் கேட்டுத்
துணிந்தவர் தாமு ரைப்பார்
அன்னகர் சென்று நானும்
அசுவமும் பாலர் கூட
இன்னகர் கொண்டு வாரேன்
யென்றவ னெழுந்தி ருந்தான். 174

தேர்களு மூன்று கோடி
சேனையு மளவு மில்லை
வீரிய யானை மேவும்
வேணது கூட மேவ
கூரிய வான வில்லுங்
குத்திய சூல வாளுஞ்
சேரவே தானெ'டுத்துச்
சென்றன னிளைய வன்தான். 175

தடவரைப் பொடிய ளாகத்
தவனனு மறைந்து போகத்
திடமுடன் சேனை செல்லச்
செகமெல்லாந் தூளெ (ழுந்த)
பொடியினால் (நிறைந்து) மேவிப்
புழுதியுஞ் சேறு மாகக்
கொடியதோ ரிலக்கு வன்தான்
கூடினன் போர்க்க ளத்தில். 176

வருகின்ற சேனை தன்னை
        மன்னருங் கண்டு நின்று
திறமுடன் கொக்க ரித்து
        சினத்துட(ன்) தாமு ரைப்பா
ரிருவகை (நிலையும் காண)
        (இன்று)தான் வருத்து தென்று
சருவியே வென்று வெட்டித்
        தம்பியை வெல்ல வேணும். 177

சீரான லவனு மப்போ
        சிந்(தனை) பண்ணி நின்று
சூரியன் தன்னை நோக்கி
        தோத்திரம் செய்ய றுத்தான்
சூரிய வானம் வில்லும்
        தடுத்தநற் பானு மெச்சி
வீரிய மாக வந்து
        விளங்கினுற் போர்க்க ளத்தே, 178

சிறுவனு மதட்டி நின்று
        சினத்துட னுரைக்க லுற்றுன்
விறகது தன்னில் கோடி
        விரைந்துதான் குவித்து வைத்து
பொறிதனைப் போட்ட பின்பு
        புகையுடன் சூழ்ந்த தீப்போல்
லுருகுசேர் சேனை தன்னை
        நொடிதனில் கொல்லு வேனே. 179

செத்ததோர் சேனை கண்டு
        சினத்துட னிலக்கு வன்தான்
மெத்தவே சேனை புக்கு
        வெட்டினுன் லவனு மப்போ
அத்தியல் பரிய ளெல்லாம்
        அத்தது கீழில் வீழ

உத்ததோ றுத்து நின்று
(ஒருங்கு) னோடு தர்க்கு. 180

ஆயிரம் தலைய ளறுத்தான்
ஐந்நூறு கனைக ளேவி
மாயமாய் வளைந்து கொண்டு
மயங்கவே சேனை யெல்லாம்
வாயினால் குருதி குக்க
மதகரி கீழில் வீழத்
தீயெனக் கோப மாகி
சிந்தநற் பாலர் தாமும். 181

உரமுடன் வந்த சேனை
ஒன்றற மாண்ட பின்பு
திறமுடன் தமய னைத்தான்
தேடியே லவனும் நிற்க
*கறு குருட ழதன்... ... ... ...
கைச்சிலை தனைப்ப றித்தான்
வெருவியே அநும னப்போ
பயத்துட னோடிப் போனான். 182

அரக்கனைத் துரத்தி ஓட்டி
அருஞ்சிலை தனைப்ப றித்து
விருத்தமாய் கணைதொ டுத்து
விட்டன னரக்கர் வீழ
செறுத்தன ரிருவ ருந்தான்
... ... ... ... ...
கருத்துடன் தமய னைப்போய்
கசிவுடன் தெண்ட னிட்டான். 183

பரந்திடுஞ் சேனை முன்னில்
புகுந்தவர் பாலர் நின்று

* தெளிவில்லை

குருவினின் வில்லினுற் தங்கு
        குயில்மொழி சீதை தந்தை
திருவளந் தன்னில் நாங்கள்
        செயிக்கிரும் படையை வென்று
வெருவியே யெதிர்ந்து நின்று
        வெட்டிவிளை யாட லுத்தார். 184

நஞ்செனுங் கால சித்து
        நடுங்கவே யவனு ரைப்பான்
வஞ்சக மாக வுன்னை
        வைத்தேநான் பால ரென்று
பஞ்செனப் பறக்க யெய்வேன்
        பகழியைப் பாரு மென்ருன்
விஞ்சிய மொழிகள் கேட்டு
        வெகுண்டவன் குசனு ரைத்தான். 185

காலசித் தென்று சொன்னுய்
        காலனை வென்ற நீயோ
(மே)லெழச் சிகத்த வேண்டாம்
        விண்டநீர் சொன்ன தெல்லாம்
நாலுபேர் முன்னு ரைத்த
        நாவறுத்துப் போடு வேண்டார்
பாலரென் றெண்ண வேண்டாம்
        பாணிமேவு வாளி பாராய். 186

அடந்த தோர்கால சித்தை
        அதட்டியே பால (ரென்று)
திடமுட னுரைத்த நாவைச்
        சினத்துடன் விழவ றுத்துத்
துடர்ந்தனற் சேனை யெல்லாம்
        துரத்தியே வென்று வெட்டிப்
படர்ந்ததோர் புகழ் படைத்துப்
        பார்தனில் விளங்கி நின்ருர். 187

மவுனமாய் வெட்கி நின்று
 மானிலந் தன்னை நோக்கி
அவசெய மாகி னேமென்
 றலறினன் கால சித்தும்
பவனியை வெட்டி வென்று
 பாலருங் கணைக ளேவி
நவமணித் தேரி றுத்து
 நறுக்கினன் கீழில் வீழ. 188

## வேறு

பொருக ளத்தில் புகுனற் இலக்குவன்
இருவருந் தானெ திர்த்த யானையை
திரிபுரஞ் செற்ற சிவனை நேரென
வொருவில் லாளியென் றுரைக்க லாகுமோ. 189

## வேறு

இலக்குமன் படையில் (வந்து)
 யேவினர் வாளி தன்னை
அக்கினி அத்தி ரத்தை
 அதிகமாய்ப் பாலர் விட்டார்
மிக்கதோர் தேரும் வந்து
 வேந்தர்தம் முடியும் நேர்ந்து
அக்கணை தன்னில் வருணன்
 அத்திர முடித்(து) (நின்றன்). 190

சிறுவனும் வாயு வாத்தி
 திடத்துட னேவி நின்ற
திறமுள்ள கணைக ளேவி
 சீக்கிரமாய்த் தான்வெ குண்டு
உறவிலும் ஞெந்து மன்னன்
 அருஞ்சிலை தன்னை விட்டுப்
பொறியெனக் கலங்கி யேதான்
 பூமியில் தான்வி ழுந்தான். 191

மன்னனும் விழுந்த பின்பு
　　மகிழ்ந்தனர் பாலர் மெத்த
உன்னிய பாலர் தாமும்
　　முயரவே கிளம்பி நின்று
கன்னினற் சீதை தன்னை
　　கருத்திலே தான ணிந்தார்
தன்னிலே புகழ்ந்து வானோ(ர்)
　　தாட்டிகம் பாத்தி ருந்தார். 192

என்செய்தார் ராம ரப்போ
　　யின்றுதான் போன தம்பி
வஞ்சனை யாயி னானே
　　வரவுதான் காணோ மென்று
நெஞ்சகம் நொந்து மெத்த
　　நெடியதோர் மூச்செ றிந்து
அஞ்சுபேர் சமத்து ளாரை
　　அழைத்திடீர் (இப்போ தென்றார்) 193

வந்தன ரஞ்சு பேரும்
　　மன்னனை வணங்கி நிற்க
விந்தைசேர் ராம னப்போ
　　விளம்பினர் வசன மொன்று
தந்திர முற்ற சேனை
　　தம்பிமார் வரவு மில்லை
சிந்தனை யாகு திப்போ
　　திடத்துடன் சொல்லு வீரே. 194

அய்யனே அயோத்தி மன்னா
　　அனுப்பிடீர் எங்க ளைத்தான்
வெய்யவே நாங்கள் சென்று
　　வேந்தையிங் கழைத்து (வந்து)
உய்யவே வெட்டி வென்று
　　உபயனர் தேரி லேற்றி

செய்யதோர் புகழ்ப டைத்துத்
திரும்பியே வருவோ மென்றார். 195

ஓடியே தூதர் வந்தார்
உதிரமும் சொரிய வேதான்
நாடியே ராமர் முன்னில்
நடுங்கவே யுரைக்க லுற்றார்
கூடிய தேர்கள் தம்பி
குஞ்சரம் தேர்கள் மாவும்
வாடியே விழுந்து தய்யா
வலியதோர் பால ராலே. 196

ஏங்கியே தான்வி ழுந்தா
ரிராமனும் பூமி தன்னில்
தாங்கியே யெடுத்த ணைத்துச்
சதிருடன் பரதர் மெள்ள
பாங்குள்ள தம்பி யில்லாப்
பண்புசேர் யாக மென்ன
தீங்கிதென் றுரைத்து வந்து
சிந்தனை பண்ண லுற்றார். 197

அதிகா னிந்திர சேது
அரக்கர்தன் சேனை (யெல்லாம்)
மதியாமல் நின்று வெட்டும்
வலியதோர் தம்பி யேநீர்
சதிரான வீரி யத்தை
(சடுதியில்) மறந்து போமோ
எதிரான பேரு மில்லை
யேதொன்று மறிகி லேனே. 198

பரதரே சேதி கேளீர்
பாலரு (மருப்பம்) னுமே

திறமுள்ள சீதை தன்னை
 சினத்தினால் வனத்தில் விட்டோ
இருவரைத் தேரி லேற்றி
 இன்னகர் கொண்டு வந்தால்
தெரியுமே அவர்கள் தன்னை
 சேதிக ளறிய லாமே. 199

போனபேர் மொழிகள் கேட்டு
 புலம்புவீர் உண்மை போல
கானக மறைந்து நின்று
 (காடவர்) போலு ரைப்பார்
வானவ ரெதிரு மில்லை
 வண்மைசேர் தம்பி மார்க்கு
ஏனய்யா பார்த்து சொல்வீ
 ரிந்தநாள் சொல்லு வேனே. 200

சீக்கிரமாக வேதான்
 சொல்லுவாய் தம்பி நீயும்
தாக்குள அனும ரோடும்
 சாம்பவா னங்க தனுமுன்
மூர்க்கமாம் சேனை யோடே
 முடிகியே கூட நீயும்
வாக்குளன் தம்பி கூட
 (மன்னரைக்) கொண்டு (வாராய்) 201

மத்தகக் கரிதேர் களையும்
 மாவுடன் வெகுசே னையையும்
கத்தியு மெறி சூலமும்
 கேத சக்க ரத்திரள்
மெத்தவே கணைக ளேந்தி
 (வெதிரும் வெங்)களம் சேந்துபோ
யுத்தபார் நடுங்கு (மா)மே
 உம்பர் சேனையும் பார்க்குமே. 202

அருளுடன் சேனை யெல்லாம்
 மடைந்தனர் போர்க்க ளத்தில்
திறமுள வனும னோடீச்
 செத்ததோர் சேனை பார்த்து
இருவர் முன்(னுள்ளம்) னொந்து
 இலக்குவர் தம்பி கூட
பரிவுட னெடுத்து(க் கொண்டு)
 (பரிந்து)முன் வந்து நின்றார். 203

கண்டனர் பரதர் தாமும்
 கண்ணிநீர் சொரிய நின்று
மண்டிய வீரி யத்தை
 மறந்தீரோ தம்பி மாரே
கண்டநற் போர்க ளுக்குத்
 தயங்கியே பயந்து நிற்பர்
அண்டியே வுங்கள் தம்மை
 அறுத்தவர் பாலர் தாமோ. 204

அனுமனும் நின்று ரைத்தான்
 அருள்புரி பரத முன்னில்
தனுவுரை பாணி பாலர்
 தசரத ராம ரூபம்
மனதினில் கோப மெண்ணி
 மடியவே பொருது (வென்று)
அனைவரும் கூட நம்மை
 அக்கிரம மென்று ரைப்பார். 205

சொன்னது கேட்டு நின்று
 துய்யனற் பரதர் தாமு(ம்)
(சொன்னதோர்) வசன மின்று
 மறுத்துநாம் சொல்ல லாமோ

உன்னிய பாலர் தம்மை
யுயர்மணித் தேரி லேற்றி
அன்னகர் கொண்டு போய்நாம்
அவருட முன்னில் வைப்போம். 206

சானகி மைந்த னின்று
தாட்டிக முரைக்க லுற்றார்
வானவர் பாத்தி ருந்த
வந்ததோர் சேனை யெல்லாம்
கோளுடன் குஞ்ச ரங்கள்
குதிரையும் வெட்டி வென்று
பானுவைக் கண்டு நீங்கும்
பனிக்குல(ம் போல நின்றான்). 207

அழகுசிதை யாமல் வந்து
அணிவகைச் சேனை புக்கு
கழுகினி லிறகு கட்டுங்
கணையினால் மோத வே(தான்)
மழையது பொழிந்தாப் போலே
வனசர மேவி நிற்கப்
பழுதுடன் சேனை பட்டுப்
பார்தனில் வீழ்ந்து தப்போ. 208

சேனைவீழப் பரியள் வீழ
தேர்க ளற்றுச் சின்னமாய்
யானைவீழ அண்ட மெல்லாம்
ஆறுபோல் குருதி யோட
மானிலம் (போற்ற) வெங்கும்
வாளியேவி பாலர் நின்ற
கொண்டல் போல குருதியோட
குஞ்சரங்கள் தன்னை யெய்தார். 209

அஞ்சனு தேவி மைந்தன்
அனும னும்மலை பிடிங்கித்
துஞ்சுவர் பாலர் என்று
சொல்லியே தானெ றிந்தான்
விஞ்சிய கணையள் விட்டு
வீழ்ந்திட மலைய றுத்து
(விஞ்சுபேர் வாளி) யேவி
வலியதோர் பாலர் நின்றார். 210

பட்டிட வேணு மென்று
பாலனுர் நோக்கி நின்று
வட்டிடங் கணைக ளெல்லாம்
வீணுமாய் விழுந்து போக
நட்டமாஞ் சேனை யின்று
நம்மாலு முகியா தென்று
திட்டென (மாரு) தீயும்
சென்றனன் சேனை விட்டு. 211

சேனையு மாண்ட பின்பு
சினத்துடன் பரதர் வந்து
மானிலம் நடுங்க நின்று
வனசர (ர்தங்கள் முன்னே)
சானகி பாலர் நின்று
சாந்தனை விழவ றுத்தார்
வானவர் பார்த்தி ருந்து
மகாபய மாக லுற்றார். 212

சென்றுதான் பாலர் நின்று
சினத்துடன் (கதையெ) டுத்து
வென்றிசேர் கணைதொ டுத்து
விட்டனர் தாமு மப்போ
மண்ணின்மேல் நின்ற சேனை
மாண்டனர் கணைக ளாலே

கன்றிய பொழுது மன்னன்
கலங்கியே மூர்ச்சை யானன். 213

விளங்கினர் பாலர் நின்று
வீறுடன் கொக்க ரித்த
தேவர்கள் தாமும் நின்று
சீதையைப் போற்றி செய்து
வளைந்ததோர் சேனை யெல்லாம்
மாண்டபின் மனம கிழ்ந்து
(கிளைத்தெழு) பூவ னத்தைக்
கிட்டியே பார்த்தி ருந்தார். 214

அலறியே தூதர் வந்தா
ரயோத்தியில் மன்னர் முன்னில்
(பலமுறு) சேனை தம்பி
பரதரும் விழ்ந்து போனர்
சலமுள பால ரிங்கே
சதிருடன் வருவ ராஞல்
மலையனு மெதிரு மல்ல,
மன்னவ ரெதிரு ம(ல்ல). 215

இந்தமா மொழிகள் கேட்டு
இராமனுங் கீழில் வீழ்ந்து
சிந்தையும் வெருவி நின்று
சினத்தவர் தாமு ரைத்தார்
எந்தனு ருயிரு மான
இளையவர் மூவர் போனர்
சந்தைய மன்றி நாமும்
சடுதியில் செல்ல வேணும். 216

இராமனு முரைக்க லுற்ருர்
இருகண்ணீர் சொரிய வேதான்

காமுக மென்னுந் தேரைக்
கடுகியே கொண்டு வாரும்
நாமினிப் போர்க்க ளத்தில்
நடக்கவே வேணு மிப்போ
தாமதஞ் செல்லு தென்று
சடுதியி லெழுந்தி ருந்தார். 217

விபீடணன் சுக்கி ரீவன்
வேணதோர் சேனை யெல்லாம்
கூடவே குஞ்ச ரங்கள்
குதிரைகள் கோடி சூழத்
தாடியே போர்க்க ளத்தில்
நடந்தனர் செகம்ந டுங்கி
நீடியே வழிந டந்து
நின்றனர் பாலர் முன்னில். 218

மன்னர்முன் பாலர் சொல்வார்
வண்மையாய்ப் பெற்ற பெண்ணைக்
கன்னியர் தானு மாகக்
கருதியே ஈய்ந்தி டாமல்
பொன்னையே வேண்டி வித்த
புல்லர்தங் குலட்ச யம்போல்
சின்னமாய்ப் போக வெட்டி
சேனையை (வெல்லு) வோமே. 219

அருள்புரி அயோத்தி மன்னன்
அடர்ந்தன போர்க்க ளத்தி
லெரியெனக் கணைக ளேவி
யெதுத்தவர் பாலர் என்றார்
திருவுறை மார்பர் நின்று
செப்பினர் வசன மொன்று
அரியதோர் பால ரேநீர்
யாருடை மைந்த ரென்றார். 220

திங்கள்சேர் முகத்தை யொத்த
சிறுவனே சேதி சொல்லீர்
உங்களைப் பெற்ற தாயா
ருயர்தனு சாத்தி ரத்தை
அங்கமா யருள்பு ரிந்த
அதிசய முனிவர் (தான்யார்)
இங்குநீ ரின்ப மாக
யென்தனக் குரைசெய் வீரே. 221

அரியதோர் மன்னரே நீர்
யாரென்று கேட்டு நின்றீர்
பொருதிடும் போர்க்க ளத்தில்
போ(ரிடும்) வீர ரெல்லாம்
சருவியே வந்தெ திர்த்த
தம்பிமார் மூவர் பட்டார்
திருவுடன் கண்டி ருந்து
செப்புமோ சேவு கத்தே. 222

(சிறுவர்தம்) முறையள் கேட்டுத்
திகைத்தனர் ராமச் சந்திரன்
கிறுபையினுல் பாலர் மீதில்
கிட்டியே தாமு ரைப்பார்
திறமுடன் (கேட்ட) தின்று
செப்புவீ ரெனவு ரைத்து
உறுதியே சொல்ல வேண்டா
முற்றது கூறு வீரே. 223

மன்னரே சொல்லு வேன்கேள்
வான(வர் சிறுவர்) நாங்க
ளன்னையே சீதை யென்பா
ரரணியந் தனிற்பி றந்தோம்
என்னையு மிவனை யுந்தா
ணிரட்டையாய்ப் பெற்றெ டுத்த(ார்)

பன்னிய சாத்தி ரங்கள்
பலபல கற்று ரைத்தோம். 224

பரிவுடன் வேந்த னேகேள்
பண்புடன் சாத்தி ரத்தை
ஒருமுனி யுரைக்க (வித்தை)
வுபதேச மாயி னேங்காண்
இருவருஞ் சிலையெ டுத்தா
லெதிரில்லை யொருவ ரென்னக்
கருணையாய் கேட்டு வந்து
காவலர் மோக மானார். 225

கொற்றவன் ராமன் முன்னில்
கூறினா னனும மின்று
இற்றைநா ளெதிர்த்த பால
ரிருவரு முமக்கு மைந்தர்
உற்றுநீர் பாரு மய்யா
ரூபமுந் தேவ ரீரே
மற்றவ ரெதிர்க்க வல்லார்
வலியதோர் ராமர் முன்னில் 226

(பாலரும்) ராமர் முன்னில்
பண்புசேர் வேளை (பார்த்து)
நீலனு மோடி வந்து
நின்றதோர் தூது விட்டான்
சாலவே சிறுவர் வந்து
தாக்கினார் கணைக ளாலே
(நீலமா) மலைய னன்ன
நிலத்திலே தான்வி ழுந்தான். 227

மற்றதோர் நீலன் ரெத்த
மாயிரம் நீல(ன் நிற்க)

உற்றநற் பால ரெய்து
  உதிரமே (ஒழுக) நின்று
டெ(ப)ற்றிசேர் நெருப்பு வாளி
  விட்டவர் நின்ற போது
பற்றற நீல ரெல்லாம்
  பட்டவர் கீழில் வீழ்ந்தார். 228

(கனத்)தினி லுரைகள் கேட்டுக்
  கலங்கியே ராம னிற்கத்
துரத்தினன் சேனை மாளத்
  துணித்தனர் வாளி யேவி
அ(ருங்கணை தன்னை யெல்)லா
  மறுத்தனர் மாண்டு போக
அரிக்குலங் கலங்கி வீழ
  அருங்கணை பாலர் விட்டார். 229

குசலவன் முனிந்து (நின்று)
  கூரிய வாளி யேவி
இசை(த்)தவ முனியை நோக்கி
  மெல்லடி போற்றி செய்து
(கசமொடு துரக) மெல்லாங்
  கணத்தினில் வீழ வெட்டி
தசரத ராமர் முன்னில்
  சரந்தனை யேவ லுற்றார். 230

அட்ட காசங்கள் பண்ணி
  யதட்டியே பாலர் நின்று
விட்டனர் (புரவி) யேவி
  வெருண்டவர் சேனை யோடப்
பட்டிட யானை சேனை
  பற்றற மாண்டு போக
திட்டெனச் சூழ்ந்த தீப்போல்
  (திடத்)துட னறுக்க லுற்றார். 231

சிறுவனுந் தேரி லேறிச்
சிலைதலை நாணை றிந்து
கறுவினன் சேனை யெல்லாம்
கலங்கியே பட்டு வீழத்
திறமுள சேனை யானை
தேர்களுந் சிதறி வீழ
யெறி(ந்தணர்) வாண மேவி
ராமனை னேக்கி நின்று. 232

(வந்த)தோர் சேனை யெல்லாம்
மாண்டபின் மன்னர் தாமும்
செந்தழ லாகி யேதான்
சிவந்தனர் கண்ணி ரண்டுஞ்
சுந்தர மான பாலர்
(செயிக்கவே) வேணு மென்று
மந்திர வாளி தன்னை
வருந்தி(யே யேவ லுற்றார். 233

## வேறு

இராகவன் கணைக ளேவியே நின்றனன்
(உலக)மு மதிர்ந்து நடுங்கிட வாரு
மைந்தர்கள் தன்னை வளமுமா யோடி
நடந்து விழுந்தது கண்டவர் (கண்டு)
(வேக மாகவே) அஞ்சு கணைவிடும்
வேளை கண்டவர் நாடி யறுத்தனர்
மேக மேனியர் னொந்து தளர்ந்தனர்
வீறு (பால(ரு) (நோக்கி)யே நின்றனர். 234

சிறுவர் செய்ததோர் சேவகங் கண்டவர்
திகைத்து நின்றனர் தசரத ராமனும்
வெறுமை யாகி நம்முடை பாணமும்
விழுந்து போகுமே வீணு மாகியே

பொறையி லாதவர் தவமது போலவும்
போகு தேகணை யிப்படித் தானென
பழுது மாகியே நோய தாகியே
பார்தனில் சிலைதனை யேவி விட்டனர். 235

## வேறு

இடியென்ன ராம பாணம்
யேங்கியே சுற்றி வீழ
கடுகியே பாலர் வந்து
கணைதனை யேவி நின்று
திடமுள பாண மூன்று
திரும்பவும் ராம னேவப்
பொடிபொடி யாய றுத்து
புகழ்ந்தனர் பாலர் மெத்த. 236

புகழ்வது கண்டு ராமன்
போதவே சலித்து நின்று
மிகவும்நாங் கணைகள் விட்டோம்
வீணுமாய்ப் போய்வி டுத்து
பகழியும் பழுது போமோ
பாலரைச் சுற்றி யிப்போ
திகழ்புனை யும்பர் பார்க்கச்
சிலைதனைக் கீழில் விட்டார். 237

சிலைதனைக் கீழில் விட்டு
சிந்தனை பண்ணி ராமன்
வலியதோர் பாலர் நின்று
மாரிபோல் வாளி யேவ
அலையவே பூமி நின்று
அட்ட கிரிக ளஞ்சப்
பலகலை கற்ற ராமன்
பார்தனில் தான்வி ழுந்தார். 238

பட்டதோர் சேனை தன்னைப்
பா(ங்கு)ட நின்று பார்க்க
இட்டதோர் குண்ட லங்க
ளியல்புனை பணிய ளெல்லாந்
திட்டனெத் தான றுத்துச்
சீதைக்கு வேணு மென்று
கட்டிய பொழுதெ டுத்துக்
கருத்துடன் தேரில் வைத்தார். 239

அனைவரும் பட்ட பின்பு
அதிசயம் பாலர் பார்க்க
அனுமனுஞ் சாம்ப வானும்
அடிக்கடி மூச்செ றிந்து
மனதினில் கபட முற்று
மாண்டவர் போற்கி டந்தார்
சானகி மைந்தர் கண்டு
தாட்டிக மாய்ப்பி டித்தார். 240

கண்டனன் மாரு தீயும்
கருத்துடன் பாலர் தம்மை
மண்டினல் வசன மொன்று
விளம்புவான் சாம்ப வான்முன்
அண்டியே யிவரை யிங்கே
அருந்தவே கட்டி யிப்போ
கொண்டுதான் போக வாரும்
கொடுமைகள் செய்த பேரை. 241

மாருதி யுரைகள் கேட்டு
மதிபுனைச் சாம்ப வானும்
வீரியந் தன்னை விட்டு
விளம்பினர் வசன மொன்று
சூரியன் குலத்து ராமன்
சோர்ந்தது கண்டி ருந்துந்

தீரமே சொல்லு (மென்று)தான்
செப்பினு ரிப்ப டிக்கு. 242

உற்றசொல் லவனுங் கேட்டு
உறுக்கியே பாலர் வந்தான்
செத்தவர் போல்கி டப்போந்
திரும்பியே போவர் தாமே
கொற்றவர் சேனை யெல்லாங்
கொன்றது கண்டி ருந்தும்
வெற்றியே பேசு கின்றீர்
யெப்படி முகிர்ந்து தோதான். 243

அஞ்சனு தேவி மைந்தர்
அரசனே சேதி கேளீர்
மிஞ்சியே நாமு ரைத்தால்
வெட்டுவர் பாலர் நம்மை
விஞ்சி(யே) கொண்டு போனுல்
வதைத்திட வேண்டா மென்பர்
வெஞ்சமாய்ச் சொல்லு மாகி
விதியுமாம் வருவ தென்ருன். 244

தார்குழல் சான கிக்குத்
தார்விளை யாட வென்று
வீரிய வான ரத்தை
மிகைத்தவர் பிடித்த டித்து
தேர்தனில் கட்டி யேற்றி
சீதைமுன் போக வென்று
சீர்புனை பாலர் தாமும்
சிந்தையு மகிழ்ந்தி ருந்தார். 245

மைந்தரும் வான ரத்தை
மலங்கவே பிடித்த டித்து
சுந்தரச் சீதை முன்னில்
துரத்தியே கொண்டு வந்து

அந்தநற் பணிக ளெல்லாம்
மாயிழை தன்னில் வைத்து
சிந்தையு மகிழ்ந்து நின்று
திருப்பதந் தெண்ட னிட்டார். 246

திருத்தமாய்ச் சீதை கண்டு
செப்பினுள் வசன மொன்று
அரிக்குலந் தன்னில் வீரர்
அனுமனுஞ் சாம்ப வானும்
முரத்துடன் கட்டி வந்தீர்
உங்கள்தன் முனிவர் கண்டால்
கருத்தினில் கோப மாவர்
கடுகியே விடுவை யென்ருர். 247

விட்டனர் பாலர் வந்து
வீரிய வான ரத்தைத்
திட்டெனச் சீதை தன்னை
திருப்பதந் தெண்ட னிட்டார்
சிட்டர்சே ராமர் முன்னில்
செல்லுவீ ரென்று ரைத்தாள்
மட்டர மாண்ட சேனை
வந்தவர் பார்த்தி ருந்தார். 248

மைந்தரு மேது ரைப்பார்
வஞ்சிதன் முன்னில் நின்று
தந்திர முற்ற சேனை
தசரத ராம னேடே
மந்திரக் கணையள் விட்டு
மடியவே பார்த்து வந்தோம்
எந்தனுக் கெதிரு மாக
யில்லையே யொருவ ரென்ருர். 249

கருத்துடன் சீதை தானும்
கலங்கியே புரைக்க லுற்ருள்

அரக்கர்தன் சேனை யெல்லா
மறுத்ததோ ராமர் முன்னில்
தரித்துநீர் நின்றோ மென்று
பாகவதஞ் சொல்ல வேண்டாம்
விருத்தமே யுங்கள் வார்த்தை
வீணுமா மிதுவே யென்றாள். 250

உரைத்ததோர் மொழிகள் கேட்டு
அடுத்தவர் பாலர் நிற்க
கருத்துடன் ஞரதந் தான்
கருணைவான் மீக ருக்குத்
திருத்தமாம் ராமன் சேனை
தோற்றதோர் சேதி சொல்ல
வருத்தமாய்ப் போக வேணும்
வருணர்தம் வேழ்வி தன்னில். 251

வருணர்தம் வேழ்வி யன்றோ
வான்மீகர் பண்ணி விட்டார்
துரிதமாய்ச் சென்று நாமும்
சொல்லவே வேணு மென்று
திறமுள நார தந்தான்
சென்றனர் சீக்கி ரத்தால்
கருணைசேர் முனியும் வந்த
காரியஞ் சொல்லு மென்றார். 252

முனிவனே சேதி கேளீர்
மொய்குழல் சீதை மைந்தர்
தனுவுறை பாணி ராமன்
தம்பிமார் மூவர் (மற்றும்)
அனைவருங் கீழில் வீழ
அருங்கணை யேவி விட்டார்
மனந்தனில் தரித்தி டாமல்
வந்தன(ன்) சொல்ல வென்றார். 253

பன்னக சாலை நோக்கிப்
        பரிவுடன் முனியும் வந்தார்
நின்றனர் பாலர் தாமும்
        நெடியதோர் சிலையு மேந்தி
நன்றிசேர் குருவே யென்று
        நலத்துடன் தெண்ட னிட்டு
அன்றவர் செய்த சேதி
        அன்புட னுரைக்க லுற்றூர். 254

அய்யரே சேதி கேளீர்
        அயோத்தியில் மன்னர் தம்மை
உய்யவே வெட்டி வென்றே
        மும்முட திருவு ளத்தால்
வையமே யளாவி வந்த
        வலியதோர் சேனை யெல்லாங்
கையினற் சிலையி னாலே
        கணத்தினில் விழவி டுத்தோம். 255

அருள்முனி கமண்ட லத்தில்
        அமுதமுங் கொண்டு வந்து
பொருத்ததோர் மன்னர் மெய்யை
        போதவே தானி னைக்க
இரவுதான் தாங்கி மெள்ள
        யெழுந்திருந் தவர்கள் போல
திரள்பரி சேனை யானை
        சேரவே யெழுந் திருந்தார். 256

வானவ தேவ ரிந்திரர்
        மாரிபோல் மலர்கள் தூவ
யானைகள் பரிகள் தேர்கள்
        அவரவர் தேக மொன்றி
சேனைகள் கூட வேதான்
        சேரவு மெழுந்தி ருந்தார்

வானவர் சேனை யெல்லாம்
    வந்தடி பணிந்து நின்றார். 257

வந்ததோர் முனியை நோக்கி
    மன்னவர் தெண்ட னிட்டார்
எந்தனு ருரைகள் கேளீர்
    ராமனே யின்று நீரும்
மைந்தரு முங்கள் மைந்தர்
    மனதிலே காண வேண்டாம்.
இந்தவூர் நாமி ருந்தா
    லிப்படி வருவ தில்லை. 258

பாதாள உலகந் தன்னில்
    வேழ்வி பண்ணினேம் வருணனுக்கு
தீதான போர்க்க ளத்தை
    திறமுட னறிகி லேன்யான்
ஆதார மாகி னின்று
    அருள்செய்யும் பால ருக்குத்
தாதிலா திணைபு யஞ்சேர்
    தசரத ராமச் சந்திரர். 259

முனிவரே நீரி ருந்தால்
    மூற்சனை வருவ தில்லை
நினைவறி யாத மைந்தர்
    நெறிகளு மறிவ ரோ தான்
சனகிதன் மைந்த ரென்று
    சற்றுநா மறிகி லோமே
மனதிலே சோப மில்லை
    வருந்திநீர் சொல்ல வேண்டாம். 260

பலகலை கற்ற றிந்த
    பண்புசே ரிராம னேகேள்
உலகப வாத மென்று
    வொன்றுதல் சீதை தன்னை

சலமுடன் காட்டில் விட்ட
சேதிகள் சொல்லக் கேட்டு
நலமுட னழைத்து வந்து
நம்முட அகத்தில் வைத்தோம். 261

மாமுனி வசன மொன்று
வண்மையா யுரைக்க லுற்ருர்
பூமியில் பிறந்த பெண்ணை
புத்திரி யாய்வ ளர்த்தோம்
காமியந் தனைய டைந்து
கருணைசே ரயோத்தி வாழும்
இராமனே பாலர் மீதி
லியல்புடன் கிறுபைசெய் வீரே. 262

உற்பல நயன முடையாளை
யோட்டிவிட்ட வொருநா ழிகையில்
முற்பெற வந்தேன் சமித்தொடிக்கும்
(முதன்மைச் சீடர்கள்) மொழிந்தார்கள்
கெர்ப்பிணியஞ்சு மாத மென்ருள்
கேட்டேஆச் சிரமழைத்து வந்தேன்
நற்புவி யோராளைக் கொண்டாட
நலத்துடன் மைந்தர்களைப் பெற்றெடுத்தாள் 263

அரக்கர்மேல் கோப மாகு
மயோற்றியி லிராமச் சந்திரர்
இரக்கமாய் பாலர் மீதி
லினியதோர் கோபம் வேண்டா
முரத்துடன் பெற்ற தெல்லா
மும்முட பெருமை யன்ருே
திருத்தமா யாளு மென்று
செப்பினர் முனியு மன்று. 264

சிந்தையு மகிழ்ந்து ராமன்
சீர்முனி தன்னை நோக்கி
மைந்தரை யழையு மென்ன
வன்மையா யழைத்து வந்து
தந்தைகா ணிவரு னக்கு
திருப்பதம் பணியு மென்ன
கந்தனு மதனும் போலே
கழலிணை யணிந்து நின்றார். 265

சதுமறை முதலே போற்றி
தாரணி யரசே போற்றி
(பதி)யினில் படியே தந்தை
யித்துடன் முன்னே நின்று
போத்திடு மெங்க ளுக்குப்
புண்ணியந் தானு மில்லை
கெதியேது மில்லை யென்று
கிட்டியே சலித்து நின்றார். 266

எடுத்துடன் ராமச் சந்திரர்
இருவரை மடியில் வைத்து
அடிக்கடி மோந்து கொண்டு
அணைத்தவர் கொண்டி ருந்தார்
படித்தனர் மன்னர் சேதி
பழங்கதை பால ரப்போ
திடத்துடன் கேட்டி ருந்து
சிந்தையு மகிழ்ந்தி ருந்தார். 267

கதிர்குல ராமச் சந்திரர்
கருணையா யுரைக்க லுற்றார்
சதிருட னிலக்கு மர்கேள்
தார்குழல் சான கிதான்
மதிமுகம் போல வேதான்
மைந்தரும் ரூப மேதான்

விதியெனும் ரூப மில்லை
விளங்குது பாரு மென்றார். 268

ஆதிசே ரயோத்தி வாழும்
அரசனே சேதி கேளீர்
சீதைதன் திருமு கத்தை
திருந்தநான் கண்ட தில்லை
பாதமே கண்டி ருப்பேன்
பரிவுடன் வணங்கு மப்போ
சேதிசே ராமச் சந்திரன்
யென்னெறி கேளு மைய்யா.

இளையவ னிவைகள் சொல்லி
இராமனும் கேட்டி ருந்து
தெளியவே மன மகிழ்ந்து
திடத்துடன் முனிய ழைத்து
வண்மையா யயோத்தி செல்ல
மதியுட னழையு மென்ன
நளினஞ்சேர் வழியில் வேந்தே
நன்மையாய்ச் சொல்லு வீரே.

மன்னவ ரயோத்தி சென்றார்
மைந்தரும் முனிவர் கூட
சொன்னதோர் வசன மொன்று
துலங்குவா(ல் மீக ருக்கு)
என்னுட யாக மிப்போ
இயலுடன் முகிய (வேதான்)
யுன்னநீர் வளர்த்த பெண்ணை
உண்மையா யழைக்க வேணும். 271

துங்கமாம் வேழ்வி செய்ய
துய்யநற் சீதை தன்னை
இங்குநீ ரழையு மென்ன
இயல்புடன் முனியு ரைப்பார்

பங்கமில் நாத ரேநீர்
பாரியைக் கூடு வீரா
இங்குநா (னெழுந்து) வாறே
னென்றவ ரெழுந்தி ருந்தார். 272

வஞ்சியை யழையு மென்ன
மன்னவன் ராமச் சந்திரன்
(மஞ்சி)யை அழைக்க யின்றே
மற்றவர் போகொ ணாது
தஞ்சமாய் வளர்த்த நீருஞ்
சடுதியி லழையு மென்றார்
இஞ்சொல்சேர் மொழியாள் கேட்டு
ஏந்திழை முன்னில் வந்தார். 273

(கன்னினற்) சீதை முன்னில்
கருத்துடன் முனியு ரைப்பார்
உன்னுட நாதன் ராமன்
உய்யவே யழையு மென்று
(புன்மையாய்க்) கூற லுற்றார்
பரிவுட னழைக்க வுந்தான்
என்னுட பின்னில் நீரு
மியல்புடன் வாரு மென்றார். 274

(தி)றமுடன் முனிவனே கேள்
(தண்ணளி இராம) ரென்னை
அருளுடன் ஓட்டி விட்டா
ரழைப்பது (தரும மல்ல)
(கருதுநற் புவன) மெல்லாம்
கருத்துட னேசு தென்றார்
மருவினே னென்று ரைத்த
வசனமு முரை(யுங் கேட்பீர்). 275

மதிமுகச் சீதை யேகேள்
　　மைந்தரும் சிலையெ டுத்து
கதிர்குல ராமன் முன்னில்
　　கருத்துட னேசு தென்றார்
சுதனென்று சொன்ன பின்பு
　　தேர்தனி லெடுத்த ளைத்து
சதிருட னயோத்தி செல்ல
　　உந்தனை யதையு (மென்றார்). 276

(தன்ம)மிகு முனிவ னேநான்
　　சதிருட னயோத்தி சென்றால்
புவனமு மேசு தென்று
　　போத(வே கூற லுற்றார்)
(எனக்கு நீ)தி பண்ணு வாரோ
　　அன்புட னழைப்பா ரோதான்
பவமிது தெரியு மோதான்
　　பண்பு(சேர்) (பெரியோய் நீரே.) 277

மானெனும் விழியி னாளே
　　மதிபுனை முகத்தி னாளே
தேனெனும் மொழியி னாளே
　　தி(ருவெனும் சொல்லி னாளே)
(வான)வன் ராமச் சந்திரன்
　　(வனத்தினில் விட்டார் முன்பு)
சானகி உன்னை யென்று
　　சதிருடன் கூ(ப்பிட் டானே). 278

மலங்கவே கண்ணி னீர்க
　　ளினியதோர் காண முன்னி
மலைநிக ரான காடும்
　　வனங்களு மிடைந்து வந்து
நலமெனு மொழியி னாளு
　　சிலைதனில் வலிய மாயன்

(நலமிகு) ராமர் முன்னில்
நிலந்தனைப் பார்த்து நின்று. 279

மன்னவன் (மந்திரி) மாரும்
மற்றுள்ள சேனைக் கெல்லாம்
பன்னகர் சாலை தன்னில்
பரிந்தமு தளித்த பின்னை
கன்னல்சேர் மொழியாள் தன்னை
காவலர் கூட்டிச் செல்ல
மென்னமா முனிவர் சொல்ல
யேந்திழை யேது சொல்வார். 280

மாதவர்க் கரசே யின்னம்
மானகர் தன்னில் சென்று
கோதையர்(க்) கருகு தானும்
குலாவியே திரிவ துண்டோ
பூதலத் தேபொ சித்(துப்)
போற்றிய பேரு முண்டோ
போதுமுன் பணியே செய்து
புவனத்தி ருப்ப னென்றான். 281

மதிகுல மன்னன் பெற்ற
மங்கையர்க் கரசே கேளாய்
விதிமுத லெழுத்(தை யெல்லாம்)
வெல்லவும் வீர முண்டோ
அதிமிறு மரவு மீசன்
ஆதிக மனுப வித்து
பதிபுக வேணு மல்லால்
பாதியில் விலக்க லாமோ. 282

சத்திய மான மைந்தன்
சந்திர மதியைப் பண்டு
வித்திடின் கணவன் (வாக்கால்)
விலைபட்டாள் புலையன் வீட்டில்

செத்ததோர் பிள்ளை தன்னை
　　தேவிதான் (கொ)ண்டு செல்லக்
கத்தியால் வெட்டி நின்று
　　காசினி யாண்ட தாலே. 283

மாமுனி யுரைத்த மாற்ற
　　மலர்மகள் மகிழ்ந்து கேட்டு
ஓமென வொப்பச் செய்து
　　யொளிமணித் தேரி லேற்றி
தாமவெண் குடைகள் சூழ
　　யானையுங் கரித்தேர் மாவும்
பூமழை பொழிந்தாப் போலே
　　புரந்தரன் போற்றி செய்தான். 284

பொங்கியே செல்வ மாகப்
　　பூமழைப் பொழிய வானோர்
மங்கலம் பாடி மாதர்
　　மணிவிளக் கங்கே யேந்தி
செங்கனிப் பவளச் செவ்வாய்
　　தெரிவையர் கவரி வீசத்
திங்கள்வெண் குடைகள் சூழ
　　சீதையொடு ராமன் சென்றார். 285

திருமகள் சீதை யர்க்கும்
　　சீரிய ராம னுக்கும்
மிருமடி முன்னே பெற்ற
　　இனிமணஞ் செய்வோ மென்று
அருமறை முனிவோர் தாமும்
　　மாரிய குலத்து ளோரும்
திருநகர ரலங்க ரித்துச்
　　சொல்லுவீர் சொல்லு வீரே. 286

சாந்தொடு புழுகு பன்னீர்
　　தரையெலா மெழுகு வித்து

மேய்ந்தமேற் கட்டி யெல்லாம்
வெள்ளியால் தகடு செய்து
பூந்துகில் மணியு முத்தும்
பொன்னுட னலங்க ரித்து
மாந்தெரு வலங்க ரித்து
நகர லங்க ரித்தார். 287

திருமகள் சீதை யர்க்குஞ்
சீரிய ராம னுக்கும்
பரிமணம் பலவுஞ் சாத்தி
பசும்பொன்னு லலங்க ரித்து
இருமுடி மணம்போற் செய்து
இமையவர் போற்றி செய்ய
மிருமணி மண்ட பத்தில்
புகுந்துதான் வாழ்ந்தி ருந்தார். 288

கன்னல்சேர் மொழியாள் சீதை
கவுசலை தன்னைப் போற்றி
பொன்னணி மாது மீண்டு
சுமித்திரை தன்னைப் போற்றி
அன்னமென் னடையார் தாமுங்
கைகேசி தன்னைப் போற்றி
மின்னனி மணங்கள் செய்து
மேலாக வாழ்ந்தி ருந்தார். 289

சங்கரன் கமல வாசன்
சகோதர ரெல்லாம் வந்து
மங்கல வாழ்வு வாழ்த்தி
இராமனை முடியுஞ் சூட்டி
சிங்கா தனத்தி ருத்தி(ச்)
சிறப்புக்கள் பலவும் செய்து
தங்களை யனுப்பிக் கொண்டு
சகலரும் விடைகொண் டார்கள். 290

செந்துவர் பவளச் செவ்வாய்
சீதையும் ராமன் தானும்
மைந்தர்க ளிருவ ரோடும்
மன்னவர் தம்பி மாரும்
(முந்தையர் மூவர் தாயும்)
(முன்னுள சுற்றத்) தாரும்
சிந்தையில் கவலை நீங்கி
செல்வமாய் தாமி ருந்தார். 291

(எங்களுக் கினிய நாத
னியல்புடன் பட்ட மேற்கச்
சங்கொடு தாரை பட்டை
சதிருடன் ஒலித்து நிற்க)
இங்கித முரச மார்ப்ப
அரம்பைய ராடல் செய்ய
மங்கல கீதம் பாட
(மகிழ்வுடன் வீற்றி ருந்தார்). 292

மங்கையர் மற்று ளோரும்
(மன்னவ ரரச ரெல்லாம்)
(பொங்கமாய் வாழ்க) வென்று
வந்தடி வணங்க வாழ்த்தி
(இங்கிதம் கூறி மிக்க)
இந்திர ராம ரெல்லாம்
(சிங்காத னத்தி ருந்தார்)
(சிந்)தையில் துயரம் நீங்கி. 293

(ஆதவன் உதய மொப்ப
அணிமதி எழுந்த தொப்ப
நூதனச் செவ்வாய் தோன்ற
நற்புதன் விளக்க மொப்ப

வாதனை நீங்க வியாழன்
வெள்ளியு முளைத்த தேபோல்)
(மாதவன்) வந்த தாலே
(மலர்மழை) பொழிந்து தப்போ. 294

திங்கள்மும் மாரி பெய்யத்
திருநகர் வாழி வாழி
பொங்கியே செல்வம் (பெற்றுப்)
(பொலிவுடன் வாழி வாழி)
மங்கல கீதம் பாட
மாமறை யோர்கள் வாழ்த்த
சங்கமு மாழி வாழி
தயரத ராமன் வாழி. 295

## குச, லவன் கதையின் பாட்டு முதற்குறிப்பு

# அகர வரிசை.


| | பக்கம் |
|---|---|
| அக்கரை | 37 |
| அக்கினி | 32 |
| அஞ்சனுதேவி | 76 |
| அஞ்சனுதேவிமைந்தர் | 85 |
| அஞ்சியே | 26 |
| அஞ்சியேசொல்ல | 47 |
| அடர்ந்ததோர் | 69 |
| அடிக்குமோ | 61 |
| அட்ட | 81 |
| அணைத்தெடுத்து | 38 |
| அண்டியே | 63 |
| அதிகா | 72 |
| அய்யரே | 88 |
| அய்யனே | 71 |
| அய்யோ | 45 |
| அரக்கர்மேல் | 90 |
| அரக்கனைத் | 68 |
| அரவமும் | 37 |
| அரிக்குல | 53 |
| அரிச்சந்திரன் | 31 |
| அரியதோர் | 79 |
| அருந்தவ | 52 |
| அரும்பகலே | 36 |
| அருளுடன்சானகிக்கு | 49 |
| அருளுடன்சேனை | 74 |
| அருள்புரிஅயோத்தி | 78 |
| அருள்புரிசீதை | 24 |
| அருள்புரிக்கவுசலாள் | 35 |
| அருள்முனி | 88 |
| அருள்முனிபால | 50 |
| அலரியே | 77 |
| அழகுசிதையாமல் | 75 |
| அனுமனும் | 74 |
| அனைவரும் | 84 |
| ஆசனந் | 20 |
| ஆதவன் | 98 |
| ஆதிசேர் | 92 |
| ஆயிரம் | 68 |
| ஆனைகள் | 64 |
| இடியென்ன | 83 |
| இந்த மாமொழிகள் கேட்டு இராமனும் | 77 |
| இந்த மாமொழிகள் கேட்டு இலக்குவன் | 33 |
| இந்த மாமொழிகள் கேட்டு இளங்கொடி | 39 |
| இந்த மாவனத்திலே | 46 |
| இந்துசேர் | 48 |
| இந்நிமித்தங் | 36 |
| இப்படிச் | 45 |
| இராகவன் | 82 |
| இராமனு | 77 |
| இருந்ததோர் | 20 |
| இலக்குமன்படையில் | 70 |

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| இலக்குவன் தனை | 65 | என்றவனுரைத்த | 27 |
| இலங்கையிலரக்கர் தம்மைஇராமனும் | 47 | என்றனர்பூராமச் | 25 |
| | | என்னையே | 37 |
| இலங்கையிலரக்கர் தம்மை இறந்திடக் | 40 | ஏங்கியே | 72 |
| | | ஏங்கியேசத்துருக்க | 31 |
| இழிகுலந் | 29 | ஏங்கியேமனம் | 27 |
| இளங்கொடி | 22 | ஒக்கவே | 56 |
| இளையவனி | 92 | ஓடியே | 72 |
| இளையவன் | 29 | ஓடியேசேனை | 59 |
| ஈரேழு | 24 | ஓடியேவந்து | 60 |
| உத்தம | 51 | ஓடினார் | 60 |
| உந்தனற் | 62 | கங்கையில் | 36 |
| உயர்மா | 51 | கட்டியே | 58 |
| உயிரிழந்தால் | 31 | கண்டகனு | 22 |
| உரமுடன் | 68 | கண்டதோர் | 55 |
| உரைத்தனள் | 47 | கண்டனர் | 74 |
| உரைத்ததோர் | 87 | கண்டனன் | 84 |
| உரைத்திடா | 26 | கதிர்குல | 91 |
| உரைத்திடுந் | 31 | கருணைசேர் | 41 |
| உற்பலநயன | 90 | கருத்துடன் | 86 |
| உற்பலவிழிச்சி | 43 | கலையுடன் | 45 |
| உற்றசொல் | 85 | கவுசலா | 35 |
| உற்றதோர் | 38 | கனத்தினிலுரை | 81 |
| எங்களுக்கினிய | 98 | கன்றிழந்த | 40 |
| எங்குமே | 52 | கன்னல்சேர் | 97 |
| எடுத்தகைச் | 18 | கன்னிகை | 41 |
| எடுத்தனர் | 35 | கன்னினற் | 93 |
| எடுத்தனற் | 19 | காட்டமுங் | 46 |
| எடுத்தனன் | 60 | காட்டிலே | 39 |
| எடுத்துடன் | 91 | காரிய | 33 |
| என்செய்தார் | 71 | கார்குழல் | 38 |
| என்றவரிராமச் | 23 | காலசித் | 69 |
| என்றவரெழுந் | 19 | கானகத் | 44 |

| | பக்கம் |
|---|---|
| குசலவ | 50 |
| குசலவன் | 81 |
| குசனே | 62 |
| கூடி | 56 |
| கூடிய | 48 |
| கூர்முனி | 50 |
| கூர்விழி | 48 |
| கொற்றவன் | 80 |
| சங்கரன் | 97 |
| சத்திய | 95 |
| சதங்கைகள் | 55 |
| சதுமறை | 91 |
| சந்தனமகில் | 37 |
| சனகனு | 24 |
| சாந்தொடு | 96 |
| சானகி | 75 |
| சிந்தையு | 91 |
| சிலேதனில் | 58 |
| சிலேதனேக் | 83 |
| சிலேயைப் | 41 |
| சிறுவர் | 82 |
| சிறுவர்தம் | 79 |
| சிறுவனுந் | 82 |
| சிறுவனுமதட்டி | 67 |
| சிறுவனும்வாயு | 70 |
| சீக்கிரமாகவேதான் | 73 |
| சீக்கிரமாகவேதேர் | 34 |
| சீதை | 48 |
| சீதைதன்னேயுந் | 28 |
| சீதையே | 42 |
| சீரணி | 17 |
| சீரான | 67 |
| சுந்தரப் | 53 |

| | பக்கம் |
|---|---|
| செத்தசேனுபதி | 64 |
| செத்ததோர் | 67 |
| செந்துவர் | 98 |
| செப்பிய | 25 |
| சென்றுதான் | 76 |
| சேனுபதியும் | 64 |
| சேனேகள் | 57 |
| சேனேயு | 76 |
| சேனேயுமாண்டபின்பு | 61 |
| சேனேவீழப் | 75 |
| சொன்னது | 74 |
| சொன்னதோர் | 26 |
| தங்கமா | 33 |
| தடவரைப் | 66 |
| தந்தை | 47 |
| தம்பிநீ | 55 |
| தரித்ததோர் | 52 |
| தளர்ந்து | 22 |
| தன்மமிகு | 94 |
| தார்குழல் | 85 |
| தார்குழல்சீதை | 54 |
| திங்கள் | 99 |
| திங்கள்சேர் | 79 |
| திடத்துட | 44 |
| திருத்தமாசீதை | 42 |
| திருத்தமாய்ச் | 86 |
| திருந்திழைச் | 39 |
| திருந்துபுகழ் | 21 |
| திருமகள்சீதையற்கும் | 96 |
| திருமகள் சீதையற்கும் சீரிய | 97 |
| திறத்துடன் | 59 |
| திறமுடன் | 93 |

| | பக்கம் |
|---|---|
| திறமுடன்சாத்திரங்கள் | 51 |
| துங்கமாம் | 92 |
| துணித்த | 19 |
| தூதரு | 65 |
| தெள்ளிய | 53 |
| தேரிலும் | 65 |
| தேர்களு | 66 |
| நகைத்தவர் | 58 |
| நஞ்செனுங் | 69 |
| நம்முட | 49 |
| நிழலிடப் | 45 |
| நினைத்து | 40 |
| நின்றனர் | 32 |
| நீதியரசன் | 21 |
| பசுபதி | 17 |
| பட்டதோர் | 84 |
| பட்டமுங் | 54 |
| பட்டிட | 76 |
| பட்டையம் | 63 |
| பரதரே | 72 |
| பரதர் | 32 |
| பரிதனைக்கட்டி | 57 |
| பரந்திடுஞ் | 68 |
| பரிவுடன் | 80 |
| பலகலை | 89 |
| பன்னக | 88 |
| பாதாள | 89 |
| பாலரும் | 80 |
| பாலரைப் | 51 |
| பிடித்துக் | 56 |
| புகழ்வது | 83 |
| புத்திர | 21 |
| புலம்பியே | 61 |

| | பக்கம் |
|---|---|
| பூமியில் | 44 |
| பூவனந் | 62 |
| பேரணி | 18 |
| பேரணி சத்துருக்கன் | 59 |
| பொங்கியே | 96 |
| பொருகளத்தில் | 70 |
| பொருதிடுஞ் | 58 |
| போனபேர் | 73 |
| போனவர் | 44 |
| மகிழ்ந்தனர் | 23 |
| மங்கையர் | 98 |
| மண்டல | 46 |
| மதிகுல | 95 |
| மதிமுகச் | 94 |
| மத்தகக்கரி | 73 |
| மயங்கியே | 65 |
| மலங்கவே | 94 |
| மவுனமாய் | 70 |
| மனைதனில் | 34 |
| மனையவள் | 30 |
| மன்னரே | 79 |
| மன்னரானவர் | 28 |
| மன்னரைக்காண்கிலே | 41 |
| மன்னரைத்தெண்டனிட்டு | 66 |
| மன்னரை நெஞ்சத் | 43 |
| மன்னர்முன் | 78 |
| மன்னவரயோத்தி | 27 |
| மன்னவரயோத்தி சென்றார் | 92 |
| மன்னவரிராமச் | 54 |
| மனனவர்தமக்கு | 39 |
| மன்னவர்நாலு | 25 |

| | பக்கம் |
|---|---|
| மன்னவர்முன்னு | 34 |
| மன்னவன் | 95 |
| மன்னனும் | 71 |
| மற்றதோர் | 80 |
| மாதவர் | 17 |
| மாதவர்க்கரசே | 95 |
| மாமுனியுரைத்த | 96 |
| மாமுனிவசன | 90 |
| மாருதி | 84 |
| மானெனும் | 94 |
| முடுக்கினன் | 59 |
| முனிவரே | 89 |
| முனிவர்க | 20 |
| முனிவனே | 87 |
| முன்னில் | 25 |
| மைந்தரு | 86 |
| மைந்தரும் | 85 |
| மைந்தர்க | 49 |
| மைந்தர்கள் | 50 |
| மைந்தனைத் | 61 |
| யானையென்ன | 30 |
| வஞ்சகீ | 43 |
| வஞ்சமாய் | 64 |
| வஞ்சியை | 93 |
| வணங்கி | 22 |
| வணங்கியே | 30 |

| | பக்கம் |
|---|---|
| வந்ததூதரை | 28 |
| வந்ததோர் சேனை | 82 |
| வந்ததோர்முனி | 89 |
| வந்தவரயோத்தி | 53 |
| வந்தவனுரைக்க | 63 |
| வந்தவர்க் | 27 |
| வந்தன | 71 |
| வந்தனர்சனக | 23 |
| வந்தனன் | 62 |
| வருகின்ற | 67 |
| வருணர் | 87 |
| வனத்திலே(பதினுன்) | 35 |
| வனத்திலே வந்து | 55 |
| வார்த்தைகளில்லை | 26 |
| வானவ | 88 |
| விட்டனர் | 86 |
| விபீடணன் | 78 |
| வில்லுறை | 23 |
| விளங்கினர் | 77 |
| வீடணன் | 42 |
| வீரனும் | 56 |
| வீரிய | 57 |
| வெம்பியே | 28 |
| வேந்தர் சொன்னது | 29 |
| ஜனமே செய | 18 |